# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 19 திங்கட்கிழமை (05-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:344




# ரணில் ஆட்சியமைத்தால் பிரபாகரனே ஜனாதிபதி!

## அதற்கான சதித்திட்டம் தயார் என்கிறார் சந்திரிகா





கொழும்பு,நவம்பர்05

"பொதுத் தேர்தலில் புதிய அரசு அமைக்க ரணில் தெரிவு செய்யப்பட்டால் நாட்டின் ஜனாதிபதி பதவியை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கைப்பற்றி விடுவார்.

"பிரபாகரன் நாட்டின் ஜனாதிபதியாவதற்கான சதித்திட்டம் சிங்கப்பூரில் கடந்த வருடம் ஜூன் மாதம் வகுக்கப்பட்டது. தற்போது ஐ.தே.கட்சி மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையிலான நேரடி ஒப்பந்தமாக இது அமைந்து விட்டது".

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணியின் தேசிய மாநாடு நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி குமாரதுங்க இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் விடுதலைப் புலிகளின் நான்கு முக்கிய உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர். இவர்களை விடுதலைப் புலிகளின் தலைவர்களுள் ஒருவரான கரிகாலனே தெரிவுசெய்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் வேட்பாளர்கள் தொடர்பான விவரங்களை ஊடகவியலாளர்கள் ஊடாக நாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை அலுவலகம் மீது கிரனேட் வீச்சு!

கொழும்பு,நவ.5

'திவயின', 'த ஐலண்ட்' பத்திரிகைகளை வெளியிடும் 'உபாலி நியூஸ் பேப்பர் லிமிட்டெட்' நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்துக்குள் நேற்று முன்தினம் காலையில் கிரனேட் ஒன்று வீசப்பட்டது.

"இந்த கிரனேட் இராணுவத்திற்குச் சொந்தமானது" என்று விசாரணை அதிகாரி கூறியதாக திணைக்களம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனமடுவில் ஒருவர் பலி!

கொழும்பு,நவ.5

ஆனமடுப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பான வன்செயல் சம்பவத்தின்போது ஐ.தே.கட்சி ஆதரவாளரான எஸ்.எம்.ரவிச்சந்திரன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது குடும்ப அங்கத்தவர்கள் மூவர் காயமடைந்தனர்.

காயமுற்றோர் சிலாபம், புத்தளம் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ)

## மட்டக்களப்பில் வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகுகின்றனர்

மட்டக்களப்பு,நவ.5

மட்டக்களப்பில் வேட்பாளர்கள் பலர் போட்டியிலிருந்து விலகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் பெயரில் இவர்களுக்கு அனுப்பப்பட்ட எச்சரிக்கை கடிதங்களால் அச்சமடைந்தே இவர்கள் போட்டியில் இருந்து விலகி வருவதாக அங்கு பேச்சடிபடுகிறது.

பொ.ஐ.முன்னணி,ஐ.தே.கட்சி ஆகியன சார்பில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேரினவாதக் கட்சிகளின் சார்பில் போட்டியிடக் கூடாது என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கைக் கடிதம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம்

## காலித் துறைமுகத்திலிருந்து தப்பிச் சென்ற கப்பல்!

கொழும்பு,நவ.5

காலித் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டுக் கப்பல் ஒன்று நேற்று அதிகாலையில் திடீரென அங்கிருந்து நைஸாகத் தப்பிச் சென்று விட்டதாகப் பொலீஸார் கூறினர்.

சிமெந்து உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த இக்கப்பலைக் கடந்த சில தினங்களாக துறைமுகக் கட்டணம் செலுத்தவில்லை எனத் தெரிவித்து பொலீஸார் தடுத்து வைத்திருந்தனர்.

நேற்று அதிகாலையில் எவருக்கும் தெரியாமல் கப்பல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மற்றைய 24 அமைப்புகளுடன் சேர்த்து

## புலிகளின் சொத்துக்களை பிரிட்டன் முடக்கிவைத்தது

லண்டன்,நவ.5

பிரிட்டனில் ஏற்கனவே தடை செய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் உட்பட 25 வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புகளின் சொத்துக்களை முடக்கி வைக்கப் போவதாக பிரிட்டிஷ் நிதித்துறை அமைச்சர் கோர்டன் பிரவுன் அறிவித்துள்ளார்.

இத்தகைய சொத்து முடக்கம் பற்றி இரு தினங்களுக்கு முன்னர் அமெரிக்கா விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து பிரிட்டனின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு காவலரின் உயிரிழப்பு

கொழும்பு,நவ.5

நாரஹேன்பிட்டி சிந்தூரா வீதியில் கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் மற்றுமொரு பொலீஸ் காவலர் நேற்று மரணமானார்.

இவருடன் சேர்த்து அந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளது.

## ஜே.வி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை

கொழும்பு,நவ.5

அம்பாறை - பதியத்தலாவை வாகனத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய வழியில் [illegible] படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது கொலைச் சம்பவம் தொடர்பாக மஹியங்கனை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)

## திருகோணமலையில் இளைஞர் கைது!

திருகோணமலை,நவ.5

திருகோணமலையில் கடந்த வெள்ளியன்று சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக திருகோணமலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

செல்வநாயகபுரத்தைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆங்கிலத்தில் சித்தி இல்லாதவர் பரீட்சை ஆணையாளர் பதவியில்?

ஆங்கில பாடத்தில் சாதாரண தர சித்தி கூடப் பெறாத ஒருவர் எப்படிப் பரீட்சை ஆணையாளராக இருக்க முடியும்?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றது சிங்களப் பத்திரிகையான 'லக்பிம'.

ஆங்கிலத்தில் உரிய தகைமை பெறாத தாங்கள் உயர் பதவி ஒன்றை எப்படி வகிக்க முடியும் என்று கணக்காய்வாளர் நாயகம், பரீட்சை ஆணையாளர் ஏ.எம்.ஆர்.பி. அமரக்கோனிடம் கேள்வி எழுப்பியிருப்பதாகவும் -

திணைக்கள விதிகளுக்கு மாறாக, ஐந்து வருடங்களுக்கு முன்னர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சோமவன்ஸ அமரசிங்க நாடு திரும்ப மறுப்பு!

இலங்கைக்குத் திரும்பி, ஐ.தே. கட்சிக்கு எதிரான தேர்தல் பிரசாரங்களில் பங்குபற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த வேண்டுகோளை வெளிநாட்டில் தலைமறைவாக வாழும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மறுத்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

தற்போது நடைபெறும் பொதுத் தேர்தல் பிரசாரங்களில் தமது தலைவர் பங்குபற்றமாட்டார் என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

கடந்த வாரம் லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி குமாரதுங்க அங்கு சோமவன்ஸ அமரசிங்கவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

அதன் பின்னர் அவருக்கு இலங்கை 'பாஸ்போட்' ஒன்று லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் வழங்கியிருந்தது. ஆனால் அது லண்டன் - கொழும்பு மார்க்கப் பயணத்துக்கு மட்டுமே பயன்படுத்தக்கூடியது என அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாக அறிய வருகிறது. (உ)

## அர்ஜுனவுக்கு எதிராக தேர்தல் களத்தில் அரவிந்த!

கொழும்பு,நவ.5

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பொ.ஐ.முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் உபதலைவரான அரவிந்த டி சில்வா ஐ.தே.கட்சியில் இணைந்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் ஐ.தே.கட்சியின் முதன்மை வேட்பாளரான மிலிந்த மொறகொடவின் பிரசார மேடைகளில் அரவிந்த டி சில்வாவும் தவறாமல் காணப்படுகின்றார்.

ஐ.தே.முன்னணிக்கு வாக்களிக்குமாறு வேட்பாளர்களிடம் கோரி

(12 ஆம் பக்கம் பார்க்க)




யுத்தத்தின் அவலங்களில் பிழைப்பு நடத்துவோரை வீழ்த்திட....

சமாதானத்துக்கான சர்வதேச ஆதரவைப் பெற்றிட.....

ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!

சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர் விடுதலைக் கூட்டணி

சின்னம் X

இலக்கம் 4 X

# இலக்கத் தகடுகளை பெறுவதற்கான அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,நவ.5

கொழும்பில் இருந்து அண்மையில் எடுத்துவரப்பட்ட வாகன இலக்கத்தகடுகள் நாளைமறுதினம் புதன்கிழமை முதல் உரிமையாளர்களுககு விநியோகிக்கப்படவுள்ளன.

இலக்கத் தகடுகளைப் பெறுவதற்கு வாகன உரிமையாளர்கள் தமது அடையாள அட்டைகளுடன் நேரில் வரவேண்டும் என்றும் -

தமது வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்களையும், வாகனத்தையும் உடன் எடுத்து வந்தாலேயே இலக்கத் தகடுகள் வழங்கப்படும் என்றும் -

யாழ்.செயலக மோட்டார் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

# ஐ.தே.கட்சியில் நான் இருக்கும் வரை அந்த அரசில் டக்ளஸ் இணைய முடியாது

## பருத்தித்துறை கூட்டத்தில் மகேஸ்வரன்

வடமராட்சி,நவ.5

"ஐ.தே.கட்சியில் நான் இருக்கும் வரை அந்த அரசில் டக்ளஸ் இணைய முடியாது. இணைய விடமாட்டேன்."

- இவ்வாறு சூளுரைத்தார் ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன்.

நேற்றுமுன்தினம் மாலை பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நடைபெற்ற கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இப்படிக் கூறினார்.

யாழ்.மாவட்ட ஐ.தே.க.வேட்பாளர் பி.சிவபாதம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மகேஸ்வரன் கூறியதாவது:-

இன்றைய அரசியல் சூழ்நிலை, போராட்டம், அவற்றால் எழுந்துள்ள பயப்பீதியான நிலைமை போன்றவற்றைப் பயன்படுத்தி இங்குள்ள சட்டவிரோத ஆயுதக்குழுக்கள், தாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் போல் நடித்து, வாக்குகளைக் கொள்ளையிட்டு, நாடாளுமன்றம் சென்று, அங்கு செய்கின்ற கூடத்தனத்தை முறியடிப்பதறகாகவே நாம் தேர்தலில் குதித்திருகின்றோம்.

இந்தச் சட்டவிரோதக் கும்பல்கள் இரண்டு தடவைகள் வாக்குகளைக் கொள்ளையிட்டு, மோசடிகள் மூலம் நாடாளுமன்றத்துக்குச் சென்றார்கள். 'ருசி கண்ட பூனைகள்' மீண்டும் அதே பாணியைப் பின்பற்ற தேர்தல் களத்துக்கு வந்திருக்கின்றன.

கடந்த பொதுத்தேர்தலில் வடமராட்சி மக்களாகிய நீங்கள், தங்களுக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக - உங்களின் பயண அனுமதி அலுவலகத்தை யாழ்ப்பாணத்துக்கு அவர்கள் மாற்றினார்கள்.

இந்தத் திடீர் தேர்தலினை எதிர்பார்க்காத அவர்கள், 2005ஆம் ஆண்டு வரை வசதியாக வாழலாம் என்ற நினைப்பில் தமது காலித்தனங்களை புரிந்துகொண்டிருந்தார்கள்.

குடாநாட்டு மக்களையும் அவர்கள் அலைக்களிக்கத் தவறவில்லை. தங்களைச் சந்தித்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் "நாங்களே எமக்கு வாக்குப் போட்டு வென்றோமே தவிர, நீங்கள் எமக்கு வாக்குப் போடவில்லை" என்றுகூட உண்மையைக் கூறியிருக்கின்றார்கள்.

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை எமது இனத்தின் ஏகப் பிரதிநிதிகளாக முழு உலகுமே ஏற்றிருக்கும் இவ்வேளையில் -

இவர்கள் கள்ள வாக்குகளைப் போட்டு -

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதோடு நிற்காமல், தாம் தமிழினத்தின் அரசியல் தலைவர்களாகவும் தங்களுக்கு மகுடம் சூடிககொள்ள முயலுகின்றார்கள்.

தலைவர் பிரபாகரனுடன் பேசுவதற்கு அரசு முயன்ற போதெல்லாம் - எத்தனை தடவைகள் - டகளஸ இடையூறாக இருந்தார் என்பது உஙகளுககுத் தெரியும். எமது இனத்திற்காகத தீரமுடன் போராடிப் புலிகள் வெறறிகளைக் குவிக்கின்ற இவ்வேளையில் -

இவ்வாறான துரோகிகளின் கபடத்தனங்களினால் எமது இனத்தின் விடுதலையும் சுதந்திரமும் கிடைப்பது பின்தள்ளப்பட்டுச் சென்று கொண்டிருக்கின்றது.

இவர்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், தூதுவர்களையும், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்கும் போது -

ஒனபது நாடாளுமன்ற உறுப்பினர்களும் பத்து பிரதேச சபைகளும் எமமிடம் இருக்கின்றன என்றதும் -

அவர்களும் அதனை நம்பி, ஏதோ இங்குள்ள மக்கள் எல்லோரும் ஏகோபிதத முறையால் வாக்களித்து, இவர்களை பிரதிநிதிகளாக தெரிவு செய்துள்ளனர் என்று கருதி, இவர்கள் சொல்லும் பொய்களை நம்பி வருகினறனர். இது எமது விடுதலைப் போராட்டத்தைப் பின்தள்ளுகின்றது.

இத்தேர்தலில் இவர்களை அடியோடு தோற்கடித்தாலேயே எமது இனத்தின் சுதந்திரமும், விடுதலையும் விரைவில் கிட்டும். இவர்கள் இத்தோதலில் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைப் பெற்றாலும் - நிச்சயமாக - அது புலிகள் அமைப்பிற்கும் தலைவர் பிரபாகரனுக்கும் இடைஞ்சலாகத தான் இருக்கும்.

இவர்கள் அந்த சொற்ப வேலை வாய்ப்புக்களையும், அரிசி, மா, சீனி, பருப்பு, சைக்கிள்களையும் உங்களுக்குத் தந்து உங்களை ஏமாற்றக் காத்திருக்கின்றார்கள் என்பது மக்களின் வறுமையையும் நலிவையையும் பயன்படுத்த இவர்கள் காத்திருக்கின்றார்கள்.

தருவது எல்லாவற்றையும் வேண்டுங்கள்.

எதுவுமே டக்ளஸினதோ, அவரது மூதாதையரதோ சொத்துக்களோ அல்ல. இவை அனைத்தும் உங்களுடைய - உங்களுக்குக் கிடைக்க வேண்டிய - சொத்துக்கள்.

தேர்தல் களம் X

ஆனால் அதற்காக எதிர்வரும் தேர்தலில் அவர்களுக்கு வாக்குப் போடாதீர்கள். அப்படிப் போட்டால் இன்னும் ஆறு வருடங்கள் எமது இனம் அலையப்போவதைத் தவிர்க்க முடியாததாகிவிடும்.

இனவாதத்தைக் கக்குகின்ற ஜே.வி.பி.அரசுடன் இணைந்தபோது கூட தாங்களும் அதே அரசுடன் வெட்கம் ஏதுமின்றி இவர்கள் ஒட்டிக் கொண்டிருந்தார்கள்.

பொ.ஐ.முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் இறுதி நாடாளுமன்ற அமர்வின்போது, அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிப் பக்கம் வந்து, கம்பீரமாக அமர்ந்தனர். ஆனால் சிலர் மிகவும் பரிதாபமான நிலையில் அரசு பக்கமே ஒட்டிக் கொண்டிருந்தனர்.

இறுதியாக எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை டக்ளஸ் தேவானந்தா தமக்கு அமைச்சர் பதவி எதுவும் புதிய அரசாங்கத்தில் வேண்டாம், தம்மையும் ஆளும் (ஐ.தே.க.) கட்சியில் பங்காளியாகச் சேர்த்து பாதுகாப்பு தந்தால் மட்டும் போதும் என்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் நான் ஐ.தே.கட்சியில் இருக்கும்வரையும் அவரை எமது பக்கம் இணைய விடமாட்டேன்.

அவர்கள் இவ்வளவுகாலமும் செய்தவைக்கான தண்டனையைப் பெற்றே ஆகவேண்டும்.

யாழ்.குடாநாட்டில் போர் அனர்த்தம் காரணமாக நூற்றுக்காணக்கான பெண்கள் விதைவைகளாகவும் அநாதைகளாகவும் ஆகியுள்ளனர். அவர்களுடைய மறுவாழ்வுக்கான

(4ஆம் பக்கம் பார்க்க)


மங்களகரமான திறப்புவிழா

மலரும் தீபாவளியே மக்கள் உள்ளத்தில் உவகை ஓங்க மலர்க என வாழ்த்தி

நாளுக்கு நாள் மாறும் நவநாகரீக உலகில் உங்கள் கோலத்தை மாற்றி நீண்ட பாவனைக்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புடைவைகளை அறிமுகமாக்கி நம்பிக்கை, நாணயத்துடனான நித்திய சேவையாலும் நியாயமான முறையில் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரினதும் மத்தியில் தன்னம்பிக்கை பெற்று தனியுலகு படைத்து நிற்கும் ஸ்தாபனம்

ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ

இல.13,14, பெரியகடை, யாழ்ப்பாணம்.

T.P.No -3139

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்களின் இடவசதி கருதி *இல.79,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தில்* எமது கிளை ஸ்தாபனம் விஷு வருசம் தமிழ் ஐப்பசி 19ஆம் நாள் இன்று [05.11.2001] திங்கட்கிழமை இலங்கை நேரப்படி பகல் 11.30மணி தொடக்கம் 12.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

அரச சட்டத்தரணியும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய *உயர்திரு.சின்னத்துரை கனகரத்தினம்* அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ஆதரவாளர்களுக்கு மன மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தங்கள் ஆதரவை என்றும் நாடும்.

ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ

ஸ்தாபனத்தினர்.

இல. 13,14 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(94241)



தீபத் திருநாளிலே அகமகிழ்ந்திட

இதோ மலிவு! சிறப்பு! அன்பான உபசரிப்பு! ஆம்...

ஆடைகளின் அமுத சுரபி உங்களை அழைக்கின்றாள்!

அவள்

வாணி ரெக்ஸ்

எடுக்க எடுக்க குறையாதது அமுதசுரபி. - அதுபோல இங்கு தெரிந்து எடுக்க எடுக்கத் தரமானதை அள்ளி வழங்கிடுவாள்

வாணி ரெக்ஸ்

இன்று அனைவரினதும் நம்பிக்கை நட்சத்திரம்.

உங்களுக்குத் தேவையான அனைத்து ஆடைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம்

வாணி ரெக்ஸ்

இல.81, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(C-18980)



விற்பனையாகின்றது

கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தரம் Iஇற்கான போட்டிப் பரீட்சைக்குரிய

பொது அறிவு

விலை 50/=

வெளியீடு:

பட்டப்படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம்.

கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை

(94229)



நிறைஞ்சனாஸ் சங்கானை

எம்.ஜீ.ஆர்., ஜெயலலிதா, நாகேஷ்

ஆயிரத்தில் ஒருவன்

(கலர்)

தினசரி: 11.00, 2.30, 5.30



ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும்

பார்வை ஒன்றே போதுமே

நாளை முதல்

உரிமைக்குரல்

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)

சனி, ஞாயிறு : 10.30, 2, 5 (புதிய நேரம்)

(C/18920)



நாகம்ஸ் சுன்னாகம்

அஜித்குமார், மகேஸ்வரி, மணிவண்ணன் நடிப்பில்

நேசம

(ரீலீஸ்)

காட்சிகள்:- 11.00, 2.30 (பு.நே.)

(94228)

அமெரிக்கா தலைமையில் நடத்தப்படும் தாக்குதல்

# கிறிஸ்தவ - இஸ்லாமிய யுத்தம் என்கிறார் ஒஸாமா பின்லேடன்

## ஐ.நா.சபை மீதும் கண்டனம்

குவைத்,நவ.5

அமெரிக்கா தலைமையில் தற்போது நடத்தப்பட்டுவரும் போர், இஸ்லாமியர்களுக்கு எதிரான கிறிஸ்தவர்களின் யுத்தம் என்று சவூதி கோடீஸ்வரர் ஒஸாமா பின்லேடன் தெரிவித்திருக்கிறார்.

கிறிஸ்தவர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமியர்கள் நடத்தும் புனிதப் போரில் சகல ஆப்கான் மக்களும் இணைந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.




அல் - ஜெஸீரா தொலைக்காட்சி மூலம் பின்லேடன் உரையாற்றிய காட்சி. அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின் தனது மறைவிடத்தில் இருந்து பின்லேடன் வழங்கிய மூன்றாவது தொலைக்காட்சி உரை இதுவாகும்.

ஒஸாமா பின்லேடன் எங்கே இருக்கிறார் என்ற சர்ச்சைகளுக்கு இடையே ஒளிப்பதிவு செய்யப்பட்ட அவரது உரை ஒன்றை 'அல்-ஜெஸீரா' தொலைக்காட்சி ஒளிபரப்பி உள்ளது.

அமெரிக்காவின் தாக்குதல்கள் ஆப்கானிஸ்தானில் ஐந்தாவது வாரமாகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் ஒஸாமா பின்லேடனின் இந்த உரை ஒளிபரப்பாகி உள்ளது.

அமெரிக்கா தலைமையிலான போருக்கு ஆதரவு வழங்கும் இஸ்லாமிய நாடுகளைக் கண்டித்துள்ள பின்லேடன், தனது உரையில் ஐக்கிய நாடுகள் சபையையும் கடுமையாகச் சாடியுள்ளார்.

"முஸ்லிம்களுக்கு எதிரான குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்படும் ஒரு கருவியே ஐ.நா." என்று வர்ணித்த லேடன், ஐ.நாவின் செயலாளர் நாயகம் கோபி அனான் 'ஒரு குற்றவாளி' என்றும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

தனக்கு ஆதரவு வழங்காத அரபு நாடுகளை ஒஸாமா பின்லேடன் கண்டித்திருப்பது உலகில் இருந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு வருவதையே காட்டுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் -

ஆப்கானிஸ்தானில் ஒஸாமா பின்லேடன் ஒளிந்திருப்பதாகக் கூறப்படும் இரண்டு இடங்களை அடையாளம் கண்டு அவற்றின் மீது கடும் வான் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி இருப்பதாகவும் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியிருக்கின்றனர். (ஐ-9)

## மூன்று வெளிநாடுகளுக்கு பிரதமர் வாஜ்பாய் விஜயம்

புதுடில்லி,நவ.5

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கான 10 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் நேற்று ஆரம்பித்தார். முதற் கட்டமாக அவர் ரஷ்யா செல்கிறார்.

தமிழகம் கூடங்குளத்தில் ரஷ்யாவின் உதவியுடன் அணு மின் நிலையம் அமைப்பது தொடர்பான முக்கிய ஒப்பந்தம் ஒன்றில் அவர் மொஸ்கோவில் கையெழுத்திடுவார்.

மூன்று நாடுகளினதும் தலைவர்களுடன் பிரதமர் வாஜ்பாய் நடத்தும் பேச்சுக்களில் சர்வதேச பயங்கரவாதம்; போருக்குப் பிந்திய ஆப்கானிஸ்தானின் சவால்களைச் சமாளிப்பது உட்பட பல முக்கிய உலக விடயங்கள் இடம்பெறும் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று ரஷ்யாவின் செண் பற்றர்ஸ பேர்க்கில் வாஜ்பாய் பூரண அரச மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார். (ஐ-9)

## பாகிஸ்தானியரை போருக்கு அழைப்பது மிக ஆபத்தானது!

### யஸீர் அரபாத் கூறுகிறார்

காஸா,நவ.5

புனித யுத்தத்துக்காக பாகிஸ்தானியரை ஆயுதம் ஏந்துமாறு ஒஸாமா பின்லேடன் விடுத்த அழைப்பு ஆபத்தானது என்று பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திச் சண்டையிடுமாறு பின்லேடன் அண்மையில் பாகிஸ்தானியாகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.



அது குறித்து கருத்து வெளியிட்ட அரபாத்; 'பின்லேடனின் இந்தக் கூற்று மிக ஆபத்தானது' என்று தெரிவித்தார்.

இஸ்லாமிய நாடுகளுக்கு எதிராக பின்லேடன் கூறும் கருத்துக்களை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றும் யஸீர் அரபாத் தெரிவித்தார் (ஐ)

## அந்திரெக்ஸுக்கு அமெரிக்காவே காரணம்

பாரிஸ்,நவ.5

இதுவரை நால்வரின் உயிர்களைக் காவு கொண்ட 'அந்திரெக்ஸ்' அமெரிக்காவில் உருவாக்கப்பட்டதென்று பிரான்ஸ் நாட்டு ஆய்வாளரான மிச்செல் மொக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தால் ஒதுக்கப்பட்ட அந்திரெக்ஸே உலகம் முழுவதும் உள்ள ஆய்வு கூடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## இழந்த பகுதிகளை தலிபான்கள் மீட்டனர்

காபூல்,நவ.5

மசார் ஏ ஷெரீப் நகருக்கு அருகே கடந்த சிலதினங்களுக்கு முன் வடக்குக் கூட்டணியிடன் இழந்த பிரதேசங்களைத் தாங்கள் மீண்டும் கைப்பற்றிவிட்டதாக தலிபான் இயக்கம் அறிவித்திருக்கின்றது. (ஐ-9)

## சியராலியோன் தீவிரவாதிகளுக்கு அல்கெய்டாவுடன் தொடர்பாம்!

### 'வாஷிங்ரன் போஸ்ட்' வெளியிடும் தகவல்

அபிஜான்,நவ.5

சியராலியோனின் புரட்சிகர ஐக்கிய முன்னணி (ஆர்.யு.எவ்.) என்ற




தீவிரவாதக் குழுவின் உறுப்பினர்கள் சிலருக்கு 'அல்கெய்டா' இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாக 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

தமது இயக்கத்துக்கு 'அல்கெய்டா' அமைப்புடன் தொடர்பு இருப்பதாகக் கிளப்பப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை மறுத்துள்ள அந்தத் தீவிரவாதக் குழு, தங்கள் இயக்க உறுப்பினர்களிடையே உள் விசாரணை ஒன்றைத் தாங்கள் ஆரம்பித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்காவில் கடந்த செம்ரெம்பர் 11ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஒஸாமா பின்லேடனும் அவரது அல்கெய்டா இயக்கமுமே பொறுப்பு என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி இருப்பது தெரிந்ததே.

இதேவேளை -

ஆர்.யு.எவ். அமைப்பின் உறுப்பினர்களில் சிலர் அல்கெய்டாவுடன் தொடர்புகளை வைத்திருக்கலாம் என்பதை அந்த அமைப்பின் மூத்த பிரமுகர் ஒருவர் பி.பி.ஸியிடம் ஒப்புக்கொண்டார்.

சியராலியோனில் சட்டவிரோதமான வழிகளில் அகழப்பட்ட பல மில்லியன் டொலர் பெறுமதியான வைரங்களை அல்கெய்டாவின் உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவருக்கு ஆர்.யு.எவ். தீவிரவாத அமைப்பினர் விற்பனை செய்திருப்பது தெரியவந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஐ-9)

ஈரானிய எல்லையில் உள்ள

# ஆப்கான் அகதி முகாம்கள் மிக மோசமான நிலையில்!

## தொற்று நோய்கள் பரவுகின்றன

தெஹ்ரான்,நவ.5

ஆப்கானிஸ்தானுக்குள் ஈரானிய எல்லையோரமாக அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களின் நிலை மிக மோசமாக உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மக்களுக்கிடையே வாந்திபேதி, எனபுருக்கி நோய் மற்றும் வயிற்றுளைவு ஆகிய நோய்கள் மிக வேகமாகப் பரவி வருகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஈரான் எல்லையில் உள்ள அகதி முகாம்.

ஆப்கானிஸ்தானுடனான தனது எல்லையை ஈரான் மூடிவிட்டது. இதனால் ஈரானுக்குள் செல்ல முடியாத சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த ஆப்கானியர்கள் ஈரானிய எல்லையில ஆப்கானிஸ்தானுக்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ள மேற்படி அகதிமுகாம்களில் தங்கி உள்ளனர்.

இவர்களுக்கான கூடாரங்களையும் உணவுப் பொருள்களையும் வழங்குவதற்கே அதிகாரிகள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஈரான் ஏற்கனவே இரண்டு மில்லியனுக்கு மேற்பட்ட அகதிகளை நாட்டுக்குள் உள்வாங்கி இருக்கின்றது. இதனால் மேலும் அகதிகள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க அது தனது எல்லையை மூடி உள்ளது. ஆனால் அகதிகளின் நிலை கருதி ஈரான் தனது எல்லையைத் திறந்துவிட வேண்டும் என்று சர்வதேச தொண்டர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஈரான் எல்லையில் உள்ள ஆப்கானிஸ்தானின் அகதிமுகாமில் இருப்பவர்களின் பாதுகாப்புக் குறிதது ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிலையம் கவலை தெரிவித்துள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் தலைவர் றூட் லூபேர்ஸ் - ஆப்கான் எல்லையில் உள்ள அகதிகள் அமெரிக்கத் தாக்குதலில் சிக்கிப் பாதிக்கப்படும் வாய்ப்புகள் இருப்பதனால் ஈரான் உடனடியாகத் தனது எல்லையை திறந்துவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



ஆப்கானிய அகதி ஒருவர் மருத்துவ நிலையம் ஒன்றில் சிகிச்சை பெறுகிறார்.

இதேவேளை -

பாகிஸ்தானும் அகதிகள் வருகையைத் தடுக்க தனது எல்லையை மூடியுள்ளது. ஆப்கானிய அகதிகளுக்கு என புதிய திட்டம் ஒன்றையும் பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் அறிவித்துள்ளார்.

ஈரான் எல்லையில் இருப்பது போன்று பாகிஸ்தானுடனான எல்லையிலும் ஆப்கான் நிலப்பரப்பினுள் அகதிமுகாம்கள் அமைக்கப்படும் என்றும் -

அங்கு முகாம்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் பாகிஸ்தான் வழ… கும் என்றும் -

முஷாரப் தனது புதிய திட்டத்தில் தெரி… துள்ளார். (ம)

## நேற்றும் தீவிர குண்டுவீச்சு!

காபூல்,நவ.5

வடகிழக்கு ஆப்கானிஸ்தானில் தஜிகிஸ்தான் எல்லை அருகே அமைந்திருந்த தலிபானின் நிலைகள் மீது நேற்று அமெரிக்கா கடும் வான் தாக்குதல்களை நடத்தியது.

இதேவேளை -

காபூல், கந்தகார் நகரங்கள் மீதும் மசார் ஏ ஷெரீப் நகர் மீதும் அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டு மழை பொழிந்ததாக செய்திகள் தெரிவித்தன. (ஐ)

## அணைக்கட்டு உடைக்கும் அபாயம்

இஸ்லாமாபாத்,நவ.5

ஆப்கானிஸ்தானில் கஜாஜி நீர் மின் உற்பத்தி நிலையமும் அதனை அண்டி அமைந்துள்ள அணைக்கட்டும் அமெரிக்காவின் வான் தாக்குதல்களால் பலத்த சேதம் அடைந்திருப்பதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் தாக்குதல் நடத்தப்பட்டால் அந்த அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் இருப்பதாகவும் தலிபான்கள் எச்சரித்துள்ளனர். 75 ஆயிரம் ஆப்கன் குடும்பங்கள் பாசனத்துக்காக இந்த அணையில் இருந்தே நீர் பெறுகின்றனர். (ஐ)

## சமயச் சந்நிதி

நெல்லியடி, நவ. 5

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த இலட்சார்ச்சனையும், சங்காபிஷேகமும், மணவாளக் கோலவிழாவும் இன்று திங்கட்கிழமை நடைபெறும். [க-173-109]

## திருட்டு சந்தேக நபருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, நவ. 5

பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் நபர் ஒருவர் கடந்த முதலாம் திகதி பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் விழிப்புக்குழு நடவடிக்கையின் போது இவர் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த யோகராசா நவநீதன் என்ற இந்த நபரை மறுநாள் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போது விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-117)

# ஐ. தே. கட்சியில் நான்....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எதையும் டக்ளஸ் செய்யாமல் தனக்கு கிடைத்த பணத்தை வீணடித்ததுடன், தாமும் சுருட்டிக் கொண்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து மிகவும் மோசமான நிலையில் உள்ளன. ஆனால் டக்ளஸோ இப்படியான பிரச்சினை யாழ். குடாநாட்டில் இல்லை என வெளிஉலகுக்குப் பொய் கூறி வருகின்றார்.

தென்னிலங்கையிலே 120 இற்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று, ஐ. தே. க. ஒரு ஸ்திரமான ஆட்சியை அமைக்கப் போகின்றது. அந்த ஆட்சியினூடு, எமது இனத்தின் ஏகப்பிரதிநிதிகளான புலிகள் மீதான தடை நீக்கப்பட்டு, யுத்தம் நிறுத்தப்பட்டு, மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் பேச்சு நடத்த — இவர்கள் இடையூறாக இல்லாத வகையில் — நிலைமையை ஏற்படுத்துவதற்கு வாக்களிக்க வேண்டும்.

இவர்கள் ஓர் ஆசனத்தைப் பெற்றால் கூட எமக்கு மிகவும் இடைஞ்சலாகத்தான் இருப்பார்கள். ஆனால் மற்றைய கட்சிகள் அப்படியல்ல.

தற்போது ஒரு தமிழ்க் கூட்டமைப்பு உருவாகி இருக்கின்றது. இந்தக் கூட்டமைப்பில் சேருகின்ற கடைசிநாள் வரை கூட, ஒரு நாள் தன்னும், ஒரு தடவை கூட, தமிழினத்தின் ஏகப் பிரதிநிதிகள் புலிகளே என்று கூட்டமைபில் உள்ள முக்கிய கட்சிகள் நாடாளுமன்றத்தில் கூறியதில்லை. இன்று கூட்டமைப்பில் நின்று ஜெயித்துக் கொள்வதற்காக புலிகளின் பெயரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் நான் நாடாளுமன்றிலும் அதற்கு முன்பும் பகிரங்கமாகப் புலிகளை ஆதரித்து, அவர்களுக்கு அனுசரணையாகச் செயற்பட்டிருக்கின்றேன். எனது ஐ. தே. க. பிரதிநிதித்துவத்தின் ஊடாக முற்றுமுழுதாகத் தமிழர் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் உறுதுணையாக இருப்பேன்.

ஐ. தே. கவின் ஆட்சிக் காலத்தில் நாம் பூரண சுதந்திரத்துடன் வாழ்ந்தோம் என்று சொல்லமுடியாது. பொ.ஐ.மு., ஐ.தே.க. இரண்டையுமே நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நிலையிலேயே உள்ளோம்.

1995 ஆம் ஆண்டு சந்திரிகா பதவியேற்றவுடன் குடாநாட்டிலிருந்து நாங்கள் ஐந்து லட்சம் மக்களும் பாரிய இடம்பெயர்வைச் சந்தித்த அபாயகரமான நிலைக்குத் தள்ளப்பட்டோம். எமது சொத்துக்கள் அழிக்கப்பட்டு, பாரிய உயிர்ச் சேதங்களும் ஏற்படுத்தப்பட்டன. தென்மராட்சியில் 5 மாதங்கள் இடம்பெயர்ந்த போதும் குண்டு வீச்சு, ஷெல் வீச்சுக்களைச் சந்தித்தோம். அங்கிருந்தும் வன்னிக்கு இடம்பெயர நேர்ந்தது. வன்னிக்குச் சென்றோர் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், கனகராயன்குளம், விசுவமடு, முல்லைத்திவு என்று இடம்பெயர்ந்து கொண்டே இருந்தார்கள். அங்கும் பல அவலங்களின் மத்தியிலேயே அவர்கள் வாழ்ந்து வந்தனர். அத்துடன் நிற்காது திரும்பி வந்தபோது 600 பேரை செம்மணியிலே புதைத்தார்கள்.

கடந்த ஒரு வருட காலத்தில் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நான் தமிழ் மக்களின் அவல நிலையை வெளிப்படுத்தப் பல துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அப்போதெல்லாம் நாடாளுமன்றத்தில் இருந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயத்தினால் மௌனமாக இருந்தார்கள். திரும்பவும் அவர்கள் வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றாலும் அப்படித்தான் இருப்பார்கள்.

தற்போது தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து நாடாளுமன்றம் செல்லும் எம். பிக்களைப் பார்த்துச் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமர்சித்து நகைக்கின்றார்கள். தந்தை செல்வா, ஜீ. ஜீ. போன்ற கல்விமான்களைக் கடந்த காலங்களில் நாடாளுமன்றம் அனுப்பிய தமிழ் மக்கள் இப்போது இத்தகையோரை ஏன் இங்கு அனுப்புகின்றார்கள் எனச் சிங்கள எம். பிக்கள் வினாவுகின்றார்கள். இப்படியானவர்கள் நாடாளுமன்றம் செல்வதன் மூலம் முழுத்தமிழினத்தையே அவர்கள் பரிகசிக்கின்ற நிலை ஏற்படுகின்றது.

தமிழர் கூட்டமைப்பில் உள்ள ஆயுதக் குழுக்கள தற்போதும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில ஈடுபட்டு வருகின்றார்கள் — என்றார்.

இக் கூட்டத்தில் ஐ. தே. கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் கனதிப்பிள்ளை உட்படப் பலர் உரையாற்றினர். (உ-9-182-173)


## நல்லூர் பிரதேச சபை-திருநெல்வேலி
## வேலைகள்
# கேள்வி அறிவித்தல் - 2001

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 09 - 11 - 2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி வரை.

02. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி:- 12 - 11 - 2001 திங்கள் நண்பகல் 12.00 மணி வரை.

03. கேள்விகள் திறக்கும் திகதி:- 12 - 11 - 2001 திங்கள் பிற்பகல் 2.00 மணிக்கு

ஏனைய விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | சபை நிதி வேலைகள் விவரம் | மீளளிக்கப்படும் கேள்விப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (ஜீ.எஸ் ரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01. | காரைக்கால் தொடர் வீதி, இணுவில். | 4000/- | 400/- |
| 02. | குளப்பிட்டி காளி கோவில் வீதி, கொக்குவில். | 3500/- | 350/- |
| 03. | வைத்திலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு. | 5500/- | 550/- |
| 04. | காந்திஜீ வீதி, கொக்குவில் மேற்கு. | 3000/- | 300/- |
| 05. | சந்திரசேகரப்பிள்ளையார் வீதி, நல்லூர் வடக்கு | 3500/- | 350/- |
| 06. | விதானையார் வீதி, கொக்குவில் கிழக்கு. | 2500/- | 250/- |
| 07. | தில்லையம்பதி சிவகாமி அம்மன் வீதி, கோண்டாவில். | 2000/- | 200/- |
| 08. | பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு. | 5000/- | 500/- |
| 09. | முத்தட்டுமட தொடர் வீதி, கோண்டாவில் மேற்கு. | 2500/- | 250/- |
| 10. | அரசடி வீதி, திருநெல்வேலி | 5500/- | 550/- |
| 11. | எம். எஸ். முதலாம்குறுக்கு வீதி, கோண்டாவில். | 4000/- | 400/- |
| 12. | கலைவாணி ச.ச.நி. வீதி தொடர் வேலை | 2000/- | 200/- |
| 13. | கலைவாணி ச.ச.நி. வீதி, பெட்டி மதகு அமைத்தல் பூநாறி லேன், கொக்குவில். | 2000/- | 200/- |
| 14. | முருகன் வீதி வெள்ள வாய்க்கால் வீதியும் குடியேற்றத் திட்ட 6ஆம் குறுக்கு வீதியும் திருநெல்வேலி. | 10000/- | 1000/- |
| 15. | திருநெல்வேலி குடியேற்றத்திட்ட 2ஆம், 3ஆம், 4ஆம் 5ஆம் குறுக்கு வீதிகள் திருநெல்வேலி. | 7500/- | 750/- |
| 16. | முருகன் வீதி - குடியேற்றத்திட்ட இணைப்பு வீதி, திருநெல்வேலி. | 5000/- | 500/- |
| 17. | செருக்கப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு. | 6000/- | 600/- |
| 18. | கலட்டி முதலாம் குறுக்கு வீதி, கோண்டாவில். | 3500/- | 350/- |
| 19. | நாவலடி வீதி, திருநெல்வேலி. | 4500/- | 450/- |
| 20. | திருநெல்வேலி திறந்த சந்தையை நவீன சந்தையுடன் இணைத்துக் கட்டல் | 10000/- | 1000/- |
| 21. | நவீன சந்தை நீர்த்தாங்கி மலகூடம் அமைத்தல் வேலை; திருநெல்வேலி. | 4000/- | 400/- |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட வேலைகள் விவரம்: | | |
| 01. | வராகி ச.ச.நி. புனரமைப்பு, கொக்குவில் மேற்கு. | 1500/- | 250/- |
| 02. | கொக்குவில் மத்திய ச.ச.நி. புனரமைப்பு, | 1000/- | 250/- |
| 03. | நாராயண ச.ச.நி— தொடர் வேலைகள், கோண்டாவில். | 750/- | 250/- |
| 04. | பிரம்படி ச.ச.நி. மீதி வேலை, கொக்குவில். | 750/- | 250/- |
| 05. | ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தடி நீர்த்தாங்கி அமைத்தல், கொக்குவில். | 1000/- | 250/- |
| 06. | ஞானவைரவர் சனசமூக நிலைய புனரமைப்பு, திருநெல்வேலி கிழக்கு. | 750/- | 250/- |
| 07. | நேதாஜீ சனசமூகநிலைய புனரமைப்பு, பொற்பதி வீதி, கொக்குவில். | 500/- | 250/- |
| 08. | மகமாஜீ ச.ச. நிலையப் புனரமைப்பு. கொக்குவில் கிழக்கு. | 400/- | 250/- |

நல்லூர் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி.
02-11-2001.

(சி/18983)

க. மணிபல்லவராஜன்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீதாலட்சுமிஅம்மா தம்பிமுத்து

இளைப்பாறிய ஆசிரியை திருமதி சீதாலட்சுமி அம்மா தம்பிமுத்து நேற்று (4-11 - 2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பிமுத்து (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும், நந்தகுமார் (கிராம சேவையாளர், பருத்தித்துறை), செந்தில்குமார் (பிராந்திய சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), டாக்டர் ராஜினி (பிரதேச சபை, நல்லூர்), காலஞ்சென்ற ரமணி (சட்ட ஆலோசகர், மக்கள் வங்கி), வசந்தி (ஆசிரியை, பொகவந்தலாவை), சாந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனலட்சுமி (பிரதேச சபை—பருத்தித்துறை), ஸ்ரீமதி, டாக்டர் சத்தியசிலன், பத்மநாதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், மட்டக்களப்பு), டாக்டர் கருணானந்தன் (அரசினர் வைத்தியசாலை, பொகவந்தலாவை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (5 - 11 - 2001) பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொலிகண்டி ஊறணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நம்பித்தாவத்தை,
பொலிகண்டி.
(சி/18984)

தகவல்:
த. நந்தகுமார்
(மகன்)

## திருமதி மகேஸ்வரி அருமைநாயகம்

பலாலியைப் பிறப்பிடமாகவும், வேதவனம் வளவு, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும், தற்போது திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அருமைநாயகம் அவர்கள் நேற்று (04-11-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா பொன்னுப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் தங்கமுத்துவின் அன்பு மருமகளும், அருமைநாயகம் (ஒய்வு பெற்ற நில அளவையாளர் நாயகம்) அவர்களின் அன்பு மனைவியும், லோகநாதன் (ஒய்வு பெற்ற உதவி நில அளவையாளர், திருமலை), செல்வநாயகி, மகேந்திரன் (U.K), சோமநாதன் (Canada), தேவிகாராணி (U.K), தேவராஜன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகாமசுந்தரி, காலஞ்சென்ற D r P இராஜரட்ணம், பத்மினி (U.K), சித்திரா (Canada), சிவகுமார் (U.K), அஜந்தினி (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, சுப்பிரமணியம், காலஞ்சென்ற பொன்னம்பலம், செல்லப்பா, காலஞ்சென்ற அன்னப்பிள்ளை காலஞ்சென்ற காமாட்சிப்பிள்ளை மற்றும் நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயவாணி, ஜெயந்தினி, கோபிநாத், ஸ்ரீகணேஷன், சசிகரன் Canada), தர்ஷினி, ஷௌரி, கிரிஷா (U.K), நிரோஷன், தனுஷன் (Canada), சிவசங்கர், சிவகணேஷ் (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [05—11—2001] திங்கட்கிழமை திருமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;-
தி. அருமைநாயகம் [கணவர்]
23, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

210/14, Lower Road,
Orr's Hill,
Trincomalee.

[94240]

உதயன்

## வடக்கிலும் கிழக்கிலும் இரு சாத்வீகப் போர்கள்

வடக்கு - கிழக்கில் இன்றும் நாளையும் இரண்டு மக்கள் போராட்டங்கள்.

வடக்கில் - யாழ்ப்பாணத்தில் - இன்று யாழ்.செயலகம் முன்பாக மறியல் போராட்டம் - யாழ்.குடாநாட்டில் 1996 - 1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனோரின் நிலை மற்றும் அவர்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுவதில் அரசுத் தரப்பு காட்டும் அசமந்தப் போக்கைக் கண்டித்து.

காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த மறியல் போருக்கு 'அன்னையர் முன்னணி' ஆதரவு தெரிவித்துள்ளது.

காணாமற்போனோர் விடயம் முன்னைய ஆண்டுகளில் சூடாக - உணர்ச்சியூட்டும் விடயமாக - பரபரப்பாகப் பேசப்பட்டபோது ஏதோ, இதோ வெட்டிப் பிடுங்கி முடிவு தரப் போகின்றோம் என்ற பாணியில் மும்முரமாக ஈடுபட்டு, காணாமற்போனோருக்காகக் கிளர்ந்தெழுந்த (?) கட்சிகள் எல்லாம், இப்போது சூடு அடங்கிவிட்ட காணாமற்போனோர் விவகாரத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு, தமது அரசியல் - தேர்தல் - பணிகளில் மும்முரமாகிவிட்டன. தேவையானால் தங்கள் தேர்தல் மேடைப் பேச்சுக்களுக்கும், அறிக்கைகளுக்கும் சாதகமாக காணாமலபோனோர விடயங்களையும் அது தொடர்பான புள்ளிவிவரங்களையும் பயன்படுத்துவதோடு அவர்களின் பணி முடிந்துவிடும். அதற்கு மிஞ்சியும் தேவைப்பட்டால், காணாமற்போனோருக்காக மேடைகளில் நீலிக் கண்ணீர் வடிப்பார்கள். அவ்வளவே!

ஆனால் காணாமற்போனோரை இழந்த குடும்பங்களின் நிலை அதுவல்ல. உணர்வும் உயிருமாய் ஒன்றியிருந்த தங்கள் பாசப்பிணைப்புகள் - உறவுகள் - காணாமற்போனதால் எழுந்த வெற்றிடம் அவர்களுக்கு ஈடுசெய்யமுடியாதது. மனதில் கனன்றுகொண்டிருக்கும் வேதனை பொறுக்கமுடியாமல் - பதில் கேட்டு - அவர்கள் பொங்கி எழுவது தவிர்க்கமுடியாதது; புரிந்துகொள்ளக்கூடியது.

குத்துக்கல்லாட்டம் இருந்த அறுநூறு பேரைக் கைதுசெய்து காணாமல் போகச்செய்த தனது படையினரை சகல சௌபாக்கியங்களோடும் பேணி வைத்துக்கொண்டு-

தனது ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் நிகழவே இல்லை என்று லண்டன் வரை சென்று சர்வதேச செய்தி ஊடகங்களுக்கு ஜனாதிபதி குமாரதுங்க புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டிருப்பது காணாமற்போனோரின் உறவுகளை மேலும் சீற்றமுற வைத்திருக்கும்.

மற்றைய போராட்டம் நாளை கிழக்கில் நடக்கும் ஹர்த்தால். மட்டக்களப்பு வாகரைப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட தமிழ்ப் பிரதேசங்கள் பலவற்றை பிரித்து 'கோறளைப்பற்று மத்தி' என்ற முஸ்லிம் பிரதேச சபையை அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் சமயத்தில் கிழக்கில் செறிவாக வாழும் முஸ்லிம்களின் பிரதேசத்தில் தமிழர் - முஸ்லிம்கள் உறவைச் சீர்குலைத்து, முஸ்லிம்களின் வாக்கைக் கொள்ளையிடும் உள்நோக்கத்தோடு - தேர்தலை ஒட்டி - அரசியல் பின்னணியில் - அவசர அவசரமாக நடைமுறைப்படுத்தும் புதிய பிரதேச சபை ஏற்பாடு இது.

இன உணர்வைத் தூண்டும் பிரதேச விவகாரம்தான் இதில் முக்கிய அம்சம் என்பதால் தேர்தல் சூடுபிடித்துள்ள இந்தக் காலத்தில் இதனை ஆதரித்தும் எதிர்த்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதும் அதற்கு அரசியல் கட்சிகள் விழுந்தடித்துக் கொண்டு ஆதரவு அல்லது எதிர்ப்புக் காட்டி போராட்டத்தில் ஒன்றுபவை போல தம்மை அம்பலப்படுத்திக் கொள்வதும் எதிர்பார்க்கப்படுவதே.

வடக்கில் இன்று நடைபெறும் மறியல் போருக்கு அரசியல் கட்சிகள் ஆதரவு காட்டுகின்றதோ இல்லையோ நாளை கிழக்கில் நடைபெறும் ஹர்த்தால் போரை ஆதரித்தும் எதிர்த்தும் அவை சீறிக்கிளம்பும் என்று எதிர்பார்க்கலாம்.

### தேர்தல் முடிந்து இரு வாரங்கள் வரை

# அரசியல்வாதிகளின் மெய்க்காவலர் சீருடையில் கடமையாற்ற உத்தரவு

கொழும்பு,நவ.5

தேர்தல் முடிவுற்று இரண்டு வாரங்கள் செல்லும்வரை அரசியல்வாதிகளின் மெய்ப்பாதுகாப்பு அதிகாரிகள் சீருடையிலேயே கடமையாற்ற வேண்டும். இதற்கான உத்தரவை பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு பிறப்பித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இந்த உத்தரவு பொருந்தும்.

பாதுகாப்புக் கடமையின் போது இலகுவாக அடையாளம் காண்பதற்காகவே இவ்வாறு உத்தரவிட்டிருப்பதாக பொலீஸ் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே நாடு முழுவதிலும் 30 விசேட தேர்தல் பொலீஸ் பிரிவுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலஸ அத்தியட்சகர்களும் உதவிப் பொலஸ் அத்தியட்சகரும் இப்பிரிவுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுவர்.

(க)

## பழமரச் செய்கை தொடர்பான கருத்தரங்கு

அச்சுவேலி,நவ.5

பழமரச் செய்கை தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை புத்தூர் கமநலசேவை நிலையத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் பழமரச் செய்கையில் ஈடுபடும், ஈடுபடவிரும்பும் பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-11)

## நாட்டு நடப்பு

### தமிழ்

கம்பனெனும் கவிஞனவன் கவிதைபாடி
கற்கண்டாய்த் தந்ததுவும் தமிழிலன்றோ!
எம்புலவன் இளங்கோவும் சிலம்பு பற்றி
எடுத்துரைத்த காவியமும் தமிழேயன்றோ!!
நம் தமிழன் வள்ளுவனும் உலக நீதி
நயம்படவே சொன்னதும் தமிழாலன்றோ!!!
வெம்புலிபோல் பாய்ந்தெழுந்த பாரதியும்
விம்மியதும் தமிழ்மொழியில் பாட்டேயன்றோ!!!!
எம்தமிழன் புகழறியா ஏதையாகி
ஏனடா இம்மண்ணைவிட்டு ஓடுகிறாய்?
செம்புழுதி சுடுகாடாய் நாடு மாறினாலும்
செகத்தினில் எம் மண்ணிற்கு ஈடுமுண்டோ?

- விகடகவி.

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் இன்று மறியல்

# அப்பாவித் தமிழ்மக்களின் படுகொலைகளுக்கு அரசின் அடிவருடிகளே பொறுப்பேற்கவேண்டும்

## ஆதரவாக பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.5

அறுநூறுக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் கொலைகளுக்கு, அரசுக்கு ஆதரவு வழங்கி அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாகக் கை உயர்த்தி வந்த அரசின் அடிவருடிக் கட்சிகளே பொறுப்பேற்கவேண்டும். வரலாறு இவர்களை மன்னிக்காது. சந்தர்ப்பம் வரும்போது மக்கள் இவர்களுக்குத் தக்க தண்டனை வழங்குவார்கள்.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், இன்று திங்கட்கிழமை யாழ். செயலகம் முன்பாக நடத்தவுள்ள மறியல் போராட்டத்திற்கு ஆதரவாக இந்த அறிக்கையை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1994இல் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் ஸ்ரீலங்கா அரசபடைகள் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமித்தது மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் பல்வேறு இடங்களிலும் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்து நிலைகொண்டிருந்த பிரதேசங்களில் எல்லாம் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை போன்ற அட்டூழியங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்தன.

குறிப்பாக யாழ்.குடாநாடு 1995இல் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் கிருஷாந்தி, ரஜனி, சாரதாம்பாள் போன்றோர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டது மட்டுமன்றி ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டது மட்டுமன்றி, இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தலைவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள், மதகுருமார், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பேதமின்றி 600இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் சித்திரவதை செய்யப்பட்டு அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டனர்.

இது தொடர்பான உண்மைகள் பாடசாலை மாணவி கிருஷாந்தியின் பாலியல் வல்லுறவு கொலை வழக்குடன் சம்பந்தப்பட்ட ராஜபக்ஷ என்ற ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் அம்பலப்படுத்தப்பட்டது.

### தூதுவர் பதவிகள்

இதன்போது மேலும் சில இராணுவக் காடையர்கள் கைது செய்யப்பட்டபோதும் எவரும் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. மாறாக அக்காலப்பகுதியில் இராணுவ உயரதிகாரிகளாக இருந்தவர்களுக்கு சந்திரிகாவினால் வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசும், அதன் அடிவருடிக் கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் வரை இந்த அவலங்கள் தொடரத்தான் செய்யும்.

இன்றுவரை காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு அரசினாலோ அல்லது அரசிற்கு ஆதரவு வழங்கும் அரச அடிவருடிக் கட்சிகளாலோ எந்தவிதமான சாதகமான பதிலும் வழங்கப்படவில்லை. அக்குடும்பங்கள் உழைப்பாளர்களை இழந்து தவிக்கின்றன. பல பெண்கள் விதவைகளாகி வருமானங்கள் இன்றித் தவிக்கின்றனர்.

நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பாடசாலை செல்லமுடியாமல் வறுமையில் சிக்கி தெருவில் பிச்சை எடுக்கும் நிலை காணப்படுகின்றது. கலாசார சீரழிவுகள் அதிகரித்துள்ளன. இக்குடும்பங்களின் அவல வாழ்வுக்கு முடிவுகாண எந்த அரசியல் கட்சிகளும் தயாராகவில்லை. மாறாக இவர்களது அவல வாழ்க்கையை தமது போக்கிலித்தனமான அரசியல் வாழ்வுக்கு மூலதனமாக்க முயல்கின்றார்கள்.

### உலகை ஏமாற்ற ஆணைக் குழுக்கள்

காணமல்போனோர் சங்கங்களினால் அரசிற்கு அழுத்தம் கொடுக்கப்படும்போது அவர்களையும் உலகையும் ஏமாற்றுவதற்காக ஆணைக் குழுக்கள் மட்டும் அமைக்கப்படுகின்றன.

- இவ்வாறு காணாமல் போனதாகக் கூறி சிங்களக் காடையர்களால் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட 600க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்களின் கொலைகளுக்கு அரசின் அடிவருடிக் கட்சிகள் பொறுப்பேற்றே ஆகவேண்டும்.

இன்று செயலகம் முன்னால் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெறும் மறியல் போராட்டத்திற்கு எமது முழுமையான ஆதரவினை வழங்குவதோடு எவ்விதமான அரசியல் தலையீடும் இன்றி இப்போராட்டம் மேலும் முன்னெடுக்கப்படுமாயின் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது முழுமையான ஆதரவினையும் வழங்கத் தயாராக உள்ளோம் - என்றுள்ளது.

(க)

## கைவிடப்பட்ட வீதி புனரமைக்கப்படுமா?

மானிப்பாய்,நவ.5

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பகுதியில் முதலியார் மகேசன் வீதி, லோட்டன் வீதி ஆகியன முடிவுறும் பகுதிகளிலுள்ள 150 மீற்றர் நீளமான வீதி இன்றுவரை திருத்தம் செய்யப்படவில்லை.

வேலைக்கைப் பிள்ளையார் கோயிலுக்கும் தென்னிந்தியத் திருச்சபைக்கும் இடைப்பட்ட இந்த வீதியில் உள்ள பள்ளமான பகுதிகள் தற்போது வெள்ளத்தினால் மூடப்பட்டிருப்பதனால் வீதி விபத்துக்களும் இடம்பெற்றுவருகின்றன.

சம்பந்தப்பட்ட திணைக்களம் கைவிடப்பட்ட இந்த வீதியை விரைவில் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-7-90)

# தீபாவளிப் பண்டிகை வியாபாரம்; நகரெங்கும் நடைபாதைக் கடைகள்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்.நகரப் பகுதியில் தீபாவளி வியாபாரம் களைகட்ட ஆரம்பித்திருப்பதையடுத்து நகரின் முக்கிய வீதிகளிலும், பஸ்நிலையப் பகுதிச் சுற்றாடலிலும் நடைபாதைக் கடைகள் நிரம்பி வழிகின்றன.

பண்டிகைக் காலங்களில் நகரப் பகுதியில் இவ்வாறான நடைபாதைக் கடைகள் முளைப்பது வழமையாக இருந்தாலும் இம்முறை அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அத்துடன் தீபாவளிப் பண்டிகையை ஒட்டி நகரப்பகுதிக்கு வரும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதனால் நகரின் முக்கிய வீதிகளில் சனநெரிசல் காணப்படுகிறது.

இதேவேளை -

நகரில் ஏற்பட்டிருக்கும் சனநெரிசலைப் பயன்படுத்தித் திருடர்கள் தமது கைவரிசைகளை அதிகளவில் காட்டக் கூடும் என்பதால் நகருக்கு வரும் மக்கள் தம்முடன் எடுத்துவரும் பொருள்களை மிகவும் விழிப்புடன் பாதுகாக்குமாறு பொலீஸார் கேட்டுள்ளனர்.

இதேவேளை -

சில தினங்களாக நகரப் பகுதிகளில அதிகளவு பொலீஸார் காவல் கடமைகளில் ஈடுபட்டிருப்பதையும் காணமுடிகின்றது. (க-4-15)

### நாளை

ஐப்பசி 20
செவ்வாய்க்கிழமை
திதி : பஞ்சமி
முற்பகல் 09.28 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
முற்பகல் 10.00 வரை
கரிநாள்
சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம் : 03.05 - 4.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எங்கு போனாலும் சரி உன் முழு இதயத்தோடு போ!

# தெற்கே மேலும் ஒரு தொகுதி பனம் கைப்பணிப் பொருள்கள்

## விரைவில் அனுப்புவதற்கு ஏற்பாடு


யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையினால் மேலும் ஒரு தொகுதி பனம் கைப்பணிப் பொருள்கள் கப்பல் மூலம் தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதற்கென குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பனம் கைப்பணிப் பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும் -

இவற்றைக் கப்பலில் அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தென்பகுதி மக்கள் மத்தியில் இந்தக் கைப்பணிப் பொருள்களுக்கு கிராக்கி இருப்பதனால் குடாநாட்டுக் கைப்பணியாளர்கள் மிகுந்த நன்மையடைந்து வருகின்றனர் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். (க-4)



நன்றி : 'டெய்லி மிரர்'

# பதினாறாவது ஆண்டின் பதிவுகள்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 02 | 05 |
| - | - |
| 06 | 11 |
| - | - |
| 1934 | 1985 |

## அமரர் தம்பு மாசிலாமணி

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

ஒரு கூட்டின் குருவிகளாய்,
கூடிக் குலாவிக் குதூகலித்த நாள்கள்!
இப்போது நினைத்தாலும் நெஞ்சம் நெகிழ்கிறது.
இன்று,
திரைகடல் கடந்து திசைக்கொன்றாய்ச் சென்று
திரவியமாய்ச் சேர்த்தாலும்,
உங்கள்
அரவணைப்பில், ஆதரவில், நாம்
அடைந்திட்ட ஆனந்தம்!
இப்போது தேடுகின்றோம; எங்கும் கிடைக்கவில்லை?

வசந்த காலத்தின் வனப்புகள்
வளமான வாழ்வை அளித்தாலும் - உங்கள்
மரணத்தின்போது - நாம்
தொலைத்துவிட்ட சந்தோஷம்
தொலைதூரம் சென்றதுவோ?

ஐம்பது வயதானதும்
அரச பணியிலிருந்துதானே இளைப்பாற நினைத்தீர்கள்?
நிரந்தரமாய் இளைப்பாற
ஏனப்பா நினைத்தீர்கள்?

நிமலனவன் காலடியில் நிம்மதியாய் இருப்பீர்கள் - என
நிச்சயமாய் நம்புகின்றோம் - அந்த
நினைவினிலே வாழுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கோவியம்பாதி,*
*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*
(94210)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 06 |
| ☆ | ☆ |
| 02 | 10 |
| ☆ | ☆ |
| 1942 | 2001 |

## திருமதி இராசாத்தி மார்க்கண்டு

அன்புக்கோர் இருப்பிடமானாய்
பண்புக்கோர் பொக்கிஷமானாய்
பார்புகழப் பதியோடு வாழ்ந்தாய்
மக்களோடு பெருமையோடு இருந்தாய்
மாதமொன்றாகியது உம்மறைவு
மறக்கமுடியவில்லை எம்மால்
வாழும் காலமெல்லாம் நாங்கள்
உங்கள் நினைவோடு வாழ்வோம் அம்மா!

ஆத்மா சாந்தி அடைக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- பிரிவால் துயருறும்
திரு.சி. அன்னலிங்கம் *(சகோதரன்)*
திருமதி மேரிபொலின் அன்னலிங்கம் *(மைத்துனி)*
செல்வன் அ.லிங்ககுமார் - லண்டன் *(மருமகன்)*
செல்வன் அ.அலஸ்ரின்குமார் - லண்டன் *(மருமகன்)*
திருமதி லிஷாங்கி ஞானதாசன் - பிரான்ஸ் *(மருமகள்)*
திருமதி ஐராங்கனி மனோகரன் பிரான்ஸ் *(மருமகள்)*
சாத்விகன், அர்விந், கிர்த்திகா - பிரான்ஸ் *(பேரப்பிள்ளைகள்)*

*"லிங்கவாசா"*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
(94188)

## வானொலி, ரி.வியில் தேர்தல் பிரசார உரை

கொழும்பு,நவ.5

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியிலும், ரூபவாஹினி தொலைக்காட்சியிலும் தேர்தல் பிரசார உரைகள் நேற்று 4ஆம் திகதி முதல் ஆரம்பமாகின. இந்த உரைகள் டிசெம்பர் முதலாம் திகதி வரை தொடரும்.

தேர்தலில் போட்டியிடும் 26 கட்சிகளுக்கும் 120 சுயேச்சைக் குழுக்களுக்கும் தேர்தல் பிரசார உரைகளுக்கான நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (உ)

## தீபாவளிக்கு முற்பணம்

யாழ்ப்பாணம்,நவ.5

சுகாதார ஊழியர்களுக்கான தீபாவளிப் பண்டிகை முற்பணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

மாகாண சுகாதார பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகள், யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கும் இந்த முற்பணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2 ஆயிரம் ரூபா முற்பணமாகக் கிடைக்கும். (க-139)

# என்றும் உங்கள் சேவையில்



| | |
|---|---|
| ☀ | X |
| 07 | X |

உங்கள் வாக்கு.
யாழ்.மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்.

## திரு. கா.சந்திரராசா SLAS

அவர்களுக்கே

*(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் (A.O.)*
*கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் ;*
*ஓய்வுபெற்ற பிரதேசச் செயலர்*
*சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை. )*

(93908)

## அன்பார்ந்த வாக்காளப் பெருமக்களே!
## மகேஸ்வரனின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றி



ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக யான் போட்டியிட இருந்தும் சட்டப் பிரச்சினை காரணமாக போட்டியிட முடியவில்லை. ஆகவே எனக்கு ஆதரவு தந்து வாக்களிக்கவிருந்த தொழில்சார் நண்பர்கள், மீனவசமூகத்தினர், கடற்றொழிலாளர் கிராம அமைப்புகள், இடம்பெயர்ந்து வாழும் மக்கள், வர்த்தக நண்பர்கள், சுதந்திர உணர்வுகொண்ட மக்கள் அனைவரும் யான் சார்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதோடு விருப்பு வாக்கை தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என நாடாளுமன்றத்திலும் வெளியுலகத்துக்கும் எடுத்துக் காட்டியவரும் துணிச்சலும் அஞ்சாநெஞ்சமும் கொண்டவரும் எனது ஆருயிர் நண்பருமாகிய கட்சியின் முதன்மை வேட்பாளர் உயர்திரு T. மகேஸ்வரன் அவர்களுக்கு (வேட்பாளர் இல. 04) புள்ளடியிட்டு அமோக வெற்றியுடன் நாடாளுமன்றத்திற்கு அனுப்புமாறு கோரி எல்லாம் வல்ல சந்நிதி முருகன் துணையும் அருளும் வேண்டி நிற்கிறேன்.

வாக்காளப் பெருமக்கள் சார்பில்,
செல்வரத்தினம் செல்வராசா
அரசடி வீதி, வடலியடைப்பு.

| | | |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 🐘 | X |
| தியாகராசா மகேஸ்வரன் (முதன்மை வேட்பாளர்) | 4 | X |

(93909)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை, (மல்லாகம்)

சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைத் தொகுதிகள் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் - 2002

1. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2001.11.16ஆம் திகதி பி.ப.2 மணிவரை.
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2001.11.19 நண்பகல் 12.00 மணிவரை.
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2001.11..19ஆம் திகதி பி.ப.2மணி.

ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உபஅலுவலகத்திலும், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி பிணைப் பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்பத்திரப் பணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01. அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | · | 35,000/- | 1,000/- | 150/- |
| 02. மல்லாகம் பொதுச் சந்தை | - | 10,000/- | 1,000/- | 150/- |
| 03. றால் மட சந்தை | - | - | 500/- | 150/- |
| 04. அளவெட்டி கருவாட்டுக்கடை இல.6 | 125/- | - | 500/- | 150/- |
| 05. அளவெட்டி கருவாட்டுக்கடை இல.7 | 125/- | - | 500/- | 150/- |
| 06. மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 300/- | 50,000/- | 1,000/- | 150/- |
| 07. மல்லாகம் ஆட்டிறைச்சிக் கடை | 300/- | - | 500/- | 150/- |
| 08. மல்லாகம் சந்தை கருவாட்டுக் கடை | 300/- | - | 500/- | 150/- |
| 09. அளவெட்டி மலைவேம்படிச் சந்தைக்கடைத்தொகுதி கடைகள் இல.1,2,3,4, என்பன | 150/- | 15,000/- | 1,000/- | 150/- |
| 10. மல்லாகம் பொதுச் சந்தை கடைத்தொகுதி கடைகள் இல.3,4,5,6,7 என்பன | 400/- | 25,000/- | 1,000/- | 150/- |
| 11. கும்பலைக் கடை | 150/- | - | 500/- | 150/- |
| **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | | |
| 01. கூத்தன் சீமா சந்தை | - | - | 500/- | 150/- |
| 02. கடைத்தொகுதி கடை. இல.01 | 100/- | | 500/- | 150/- |
| கடை. இல.02 | 100/- | - | 500/- | 150/- |

முக்கிய குறிப்பு:- *☆ மாத வாடகைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறிவிடப்படும்.*
*☆ கேள்வித் தொகை. கேள்விப் பத்திரப்பணம்.. மாத வாடகை ஆகியவற்றுக்கு பொருள்கள் சேவைகள் வரியும் (ஜி.எஸ்.ரி. -12.5%) மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்.*

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)
2001.11.01

(C-18962)

திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன்(J.P.U.M.)
தலைவர்,
வலி.வடக்கு பிரதேச சபை.

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் இலவச தொழிற் பயிற்சி நெறிகள்

## புதியவர்களும் இணைந்துகொள்ளலாம்

யாழ்ப்பாணம்,நவ.5

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் (யு.என்.எச்.சி.ஆர்.) ஆதரவுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் இலவச தொழிற்பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

யாழ்.அரச அதிபர் ஊடாக செயற்படுத்தப்பட்டுவரும் இந்தப் பயிற்சி நெறிகள் உரும்பிராயில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகின்றன.

ரி.வி., ரேடியோ திருத்துதல், வயறிங், றிவைண்டிங், தையல் மெஷின் திருத்தம் ஆகிய பயிற்சிகளே இவ்வாறு இலவசமாக நடத்தப்பட்டுவருவதாகவும் -

இந்தப் பயிற்சிகளில் சுமார் 85 பேர் வரையில் கலந்துகொண்டுள்ளதாகவும் -

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் நன்மைகருதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சி நெறிகளில் புதிதாக இணைந்துகொள்ள விரும்புவோர் உடனடியாக யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள தமது தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(க-4)


விற்பனைக்குண்டு

காரைநகர், களபூமியிலுள்ள திக்கரை முருகமூர்த்தி கோயிலில் நல்ல நிலையில் உள்ள மூன்று தலைகளுடனான சூரன் (உபயோகத்திற்கு உகந்தது) விற்பனைக்குண்டு.

(94215)

தொடர்பு:-ஆதீனகர்த்தா, கா.பொன்னம்பலம், 77,வேம்படி வீதி, யாழ்ப்பாணம். T.P. NO.2765


உ

ஸ்ரீ காமாக்ஷி துணை

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

## 05.11.2001

HAPPY BIRTHDAY



இலண்டனில் வசிக்கும்

**செல்வன் த.ரிகேஷ்**

இல.5,கலட்டி அம்மன் வீதியைச் சேர்ந்த

**தபேஷ் - தயந்தினி**

தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**ரிகேஷ்**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (05.11.2001) திங்கட்கிழமை இலண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

ரிகேஷ் குட்டியை இலண்டனில் வசிக்கும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சுகுணா அத்தை குடும்பம், கனடாவில் வசிக்கும் சதீஸ் பெரியப்பா குடும்பம், மற்றும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சதீஸ் மாமா, கவிதா அத்தை, குட்டி அன்ரா, ஜேர்மனியில் வசிக்கும் தயா மாமா குடும்பம், சுபா மாமா குடும்பம், மன்னாரில் வசிக்கும் ராஜி பெரியம்மா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் எல்லாம் வல்ல ஸ்ரீ காமாக்ஷி அம்மனின் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றார்கள்.

*கலட்டி அம்மன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (94167) - ஆசைமாமா சதீஸ்.


## தீபாவளியை முன்னிட்டு!...

03.11.2001 முதல் 14.11.2001 வரை

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸின்

## மாபெரும் மலிவு விற்பனை

*சாறி வகைகள்*

| | | |
|---|---|---|
| ☆ நவீன் சாறிவகைகள் | ~~2250/-~~ | 1800/- |
| ☆ பொண்டாட்டி சொன்னாளே (சில்க்) | ~~1250/-~~ | 1000/- |
| ☆ புது மனசு | ~~1000/-~~ | 850/- |
| ☆ புது வருஷம் | ~~1350/-~~ | 1050/- |
| ☆ மாப்பிள்ளைவீட்டுப் பெண் | ~~1300/-~~ | 1200/- |
| ☆ கோப்றா சில்க் | ~~1000/-~~ | 700/- |
| ☆ யப்பான் சாறி | ~~950/-~~ | 750/- |

☆ பட்டு சாறிகள் குறித்த விலையில் 15% கழிவு தரப்படும்.

| | | |
|---|---|---|
| ☆ சூட்டிங் வகைகள் | ~~400/-~~ | 350/- |
| ☆ பட்டசில்க் பிளேன் | ~~90/-~~ | 77/50 |
| ☆ டபானா பிறின்ற்(60") | ~~150/-~~ | 135/- |
| ☆ டயானா பிறின்ற்(44") | ~~130/-~~ | 125/- |
| ☆ சைனிஸ் சீத்தை | ~~75/-~~ | 65/- |

☆ ஸ்கேட் அன் பிளவுஸ் (இம்போட்) குறித்தவிலையில் 15% கழிவு தரப்படும்.

☆ பேபி சூட் வகைகள் 10% கழிவு தரப்படும்.

☆ சேட் வகைகள் (இம்போட்) குறித்த விலையில் 15% கழிவு தரப்படும்.

மற்றும் இந்தியன் சாறி, கவுண் வகைகள், இம்போட் சூட்டிங்ஸ், லேடீஸ் T.சேட்ஸ், வொயில் சாறி, ரங்குலர் கறுப்பு வெள்ளை, பிளேன் மற்றீரியல்ஸ், இந்தியன் சாரங்கள், டெனிம் ரவுசர் என்பனவற்றை மலிவு விலையில் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:-

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

இணை நிறுவனம்:- ஜோகாஸ்

இல.18, நவீன சந்தை, (C-18956) யாழ்ப்பாணம்.


## யுவதிக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,நவ.5

வடமராட்சி, வல்லிபுரக் கோயில் தடைமுகாம் பகுதி ஊடாக கடந்த புதன்கிழமை இரவு 9.15 மணிக்கு அடையாள அட்டைகள் ஏதுமின்றி கடந்துசெல்ல முற்பட்ட 22 வயது யுவதியொருவரை அப்பகுதியில் கடமையில் இருந்த படையினர் கைது செய்து பருத்தித்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேவராசா சுபாஷினி (மாயா - வயது 22) என்னும் இந்த யுவதியைப் பொலீஸார் பருத்தித்துறை நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை ஆஜர் செய்தனர்.

யுவதியை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தையில் மீன் விற்பனை செய்யும் ஒருவரை சைக்கிளில் ஏற்றிச் சென்று விட்டுவிட்டுத் திரும்பும்போது அடையாள அட்டை இல்லாததால் படையினர் கைது செய்ததாக யுவதி தெரிவித்தார்.

(க-117)

## நுளம்பு வலைகளுக்கு 'போமத்ரின்'

சண்டிலிப்பாய், நவ.5

நுளம்பு வலைகளுக்கு 'போமத்ரின்' கிருமிநாசினி தோய்த்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இன்று திங்கட்கிழமை மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் இந்நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

புதன்கிழமை சாவற்கட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், வியாழக்கிழமை ஆனைக்கோட்டை முள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், வெள்ளிக்கிழமை உயரப்புலம் உதயதாரகை சனசமூக நிலையத்திலும் இக்கிருமிநாசினி தோய்த்துக் கொடுக்கப்படும்.

இப்பகுதியிலுள்ள மக்கள் இந்த நிலையங்களில் தங்கள் வீட்டுப் பாவனையிலுள்ள நுளம்பு வலைகளுக்கு இலவசமாக இம்மருந்தை தோய்த்துக் கொள்ள முடியும் என்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-135)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு கப்பலில் ஓட்டோ

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்.போதனா வைத்தியசாலையின் உபயோகத்திற்காக கொழும்பில் இருந்து ஓட்டோ ஒன்று யாழ்போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை வந்துசேர்ந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினரின் நோயாளர் கப்பலிலேயே இந்த ஓட்டோ எடுத்துவரப்பட்டுள்ளது.

இதே கப்பலில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு குறிப்பிட்ட அளவில் மருந்துப்பொருள்களும் எடுத்துவரப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-6)

## நன்றி நவிலலும் பாராட்டும்

யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்தின் கல்வி அபிவிருத்தி கருதி தற்காலிக கட்டடம், மலசலகூடம், தளபாடங்கள் என்பவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்துதந்தமைக்காக

மாண்புமிகு அமைச்சர்

K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

வலி.வடக்குப் பிரதேச பொறுப்பாளர்

திரு. வேலு சிவகுமார்

அவர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.
காங்கேசன்துறை.

(94193)


வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

தீபாவளியை முன்னிட்டு

## மாபெரும் மலிவு விற்பனை

இன்றே நாடுங்கள்!

## நைடன் புடைவை நிலையம்

24.10.2001 முதல் 14.11.2001 வரையும்

சகலவிதமான புடைவைகளுக்கும் விசேடகழிவு வழங்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

T.P. - 2381

நைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/18907)


# UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

The Chairman, Tender Board, University of Jaffna will receive sealed tenders from contractors registered with (ICTAD) for civil Engineering works or from Multi Purpose Co-operative Societies for the 'Repairs/Colour washing to Mathematics Block, University of Jaffna'.

Tender forms may be obtained from the Works Engineer (civil), University of Jaffna until 08.11.2001 on producing Registration book and receipt for the cash payment for the following tender fees at the shroff's counter of University of Jaffna.

1. Refundable deposit Rs. 5000/=
2. Non-refundable deposit Rs. 500/=

Perfected tenders to be sent to reach the Chairman, Tender Board, University of Jaffna or deposited in the tender box kept at the Registrar's Office, University of Jaffna on or before 15.11.2001 at 10.00 a.m.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Planning Branch of this University during office hours if necessary.

Registrar,
University of Jaffna.

P.O. Box 57,
Thirunelvely,
Jaffna. (C-18952)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 12 - 02 - 1942



மறைவு 06 - 10 - 2001

**திருமதி இராசாத்தி மார்க்கண்டு**

ஒப்புற வாழ்ந்து வளமூட்டி எம்மை
செப்புற வழி நடத்தி செம்மை
இப்பிறப்பில் ஊட்டிய உன்னை
எப்பிறப்பில் காண்போம் இனி?
ஆத்மா சாந்தி அடைக!
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

*"பவள வாசா"*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (94187) - சுந்தரம் குடும்பத்தினர்.

# ஐ.தே.கவுக்கு - 125; பொ.ஐ.முன்னணிக்கு - 75
# தேர்தல் முடிவு குறித்து 'ராவய'வின் கணிப்பு!

**டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் அரசியல் கட்சிகளின் வெற்றி வாய்ப்புக்கள் எவ்வாறு அமையலாம் என்பது குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை. "ராவய" சிங்கள வார இதழில் வெளியான அரசியல் விமர்சனத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணியின் தோல்வியைத் தவிர்க்கவே முடியாது. தேர்தல் மோசடிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அருகியுள்ளதாலும், பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த பலம்வாய்ந்த ஒருகுழு ஐ.தே.கட்சியுடன் இணைந்துள்ளதாலும் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஐ.தே.கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொண்டிருப்பதாலும் ஐ.தே.கட்சிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. அதேவேளை இவையே பொ.ஐ.முன்னணியின் தோல்விக்கு முக்கிய காரணிகள் எனக் கருதலாம்.

ஐ.தே.கட்சிக்குக் கிடைக்கவுள்ள வெற்றிவாய்ப்பின் தன்மை மற்றும் பொ.ஐ.முன்னணி சந்திக்கவுள்ள தோல்வியின் தன்மை குறித்து தீர்க்கமான முடிவுக்கு வர இன்னும் சில நாள்கள் பொறுத்திருக்க வேண்டும். இருப்பினும் ஏற்படவுள்ள மாற்றங்களின் நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்வது முடியாத விடயமல்ல.

1999இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பொ.ஐ.முன்னணிக்கு 43,12,157 வாக்குகள் அல்லது வாக்களிக்கப்பட்ட வாக்குகளின் 50.12 சதவீதம் கிடைத்தது. ஆனால் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது 39,00,901 வாக்குகள் அதாவது வாக்களிக்கப்பட்ட வாக்குகளின் 45.1 சதவீத வாக்குகளே கிடைத்தன.

1999 ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.கட்சிக்கு 36,02748 வாக்குகள் (42.71 சதவீதம்) கிடைத்தன. 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது 34,70, 770 வாக்குகள் (40.21 சதவீதம்) கிடைத்தன.

1999 ஜனாதிபதித் தேர்தலின் போது பொ.ஐ.முன்னணியினர் 10 லட்சம் போலி வாக்குச் சீட்டுகளை அச்சிட்டுப் பயன்படுத்தினர் என நம்பகமான தகவல்கள் வெளியாயின. இருப்பினும் அவற்றுள் எத்தனை வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து தெளிவான தகவல் இல்லை. 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது கீழ்த்தரமான தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதற்கான சாட்சியங்கள் உள்ளன.

மோசடிகள் மூலம் பொ.ஐ.முன்னணிக்குக் கிடைத்த வாக்குகளைக் கழித்துப் பார்த்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தல் மிக நெருக்கமான போட்டியாக அமைந்திருக்கும் எனவும் அதேபோலவே கடந்த பொதுத் தேர்தலின்போதும் ஐ.தே.கட்சி. மேலும் முன்னணி நிலைக்கு வந்து மிக நெருக்கமான போட்டியாக அமைந்திருக்கும் எனவும் கருத இடமுண்டு.

அப்போது பொ.ஐ.முன்னணியின் தேர்தல் பிரசார இயந்திரமாக விளங்கிய எஸ்.பி.திசநாயக்கா தற்போது பொ.ஐ.முன்னணியில் இல்லை. அவர் அந்த முன்னணியில் தற்போது இல்லாவிட்டாலும் பொ.ஐ.முன்னணி கீழ்த்தரமான செயல்களில் இறங்காது எனக் கூற முடியாது.

அரசமைப்பிற்கான 17ஆவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணையாளருக்குக் கிடைத்துள்ள அதிகாரங்கள் பாராட்டும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுமேயானால் அரச உடைமைகளைத் தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த பொ.ஐ.முன்னணிக்கு இருக்கும் வாய்ப்புகளும் ஏமாற்று வேலைகளுக்கான வாய்ப்புகளும் மட்டுப்படுத்தப்படும். இவற்றால் எதிர்க்கட்சியினர் ஆதாயம் பெறுவர்.

### முஸ்லிம்களின் வாக்கு

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட பல கட்சிகளை இணைத்து முக்கிய அணியாக ஐ.தே.கட்சி தேர்தல் களத்தில் குதித்துள்ளதால் கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக நாடெங்கும் பரவலாக வாழும் முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறும் வாய்ப்பு ஐ.தே. கட்சிக்குக் கிடைத்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவு மத்திய மாகாணத்தில் குறிப்பாகவும், சப்பிரகமுவ மாகாணத்தில் பரவலாகவும் ஐ.தே.கட்சிக்குக் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

பொ.ஐ.முன்னணியில் இருந்து பிரிந்து ஐ.தே.கட்சியில் இணைந்துள்ள ஒரு சில முக்கியஸ்தர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை. ஆயினும் இந்தக் கட்சித் தாவல் காரணமாக ஐ.தே. கட்சியின் அரசியல் மேடைகளை அலங்கரிக்கச் சிறந்த பேச்சாளர்கள் கிடைத்துள்ளனர் என்பது உண்மையே. ஐ.தே.கட்சியில் அதிரடிப் பேச்சாளர்கள் ஒருசிலர் மாத்திரமே உள்ளனர்.

1994இன் பின்னர் அனைத்துத் தேர்தல்களின்போதும் ஐ.தே.கட்சி தற்காப்பு நிலையில் செயற்பட்டதே தவிர தீவிர நடவடிக்கைகள் எவற்றிலும் இறங்கவில்லை. அதேநேரம் பொ.ஐ.முன்னணியானது தீவிர நடவடிக்கைகளில் இறங்கியது. தற்காப்பு நடவடிக்கைகள் எதனையும் அனுசரிக்கவில்லை. தற்போது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொ.ஐ.முன்னணியில் இருந்து பலம் வாய்ந்த குழுவொன்று ஐ.தே.கட்சியுடன் இணைந்துள்ள நிலையில் - அவ்வாறு இணைந்துள்ளவர்களின் முக்கிய அரசியல் குறிக்கோளாக ஜனாதிபதி அமைந்துள்ள நிலையில் - இந்தப் பொதுத்தேர்தலின்போது ஐ.தே.கட்சியானது தற்காப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு தீவிர நடவடிக்கைகளை அனுசரிக்க வாய்ப்புக்கள் உள்ளன எனக் கருதமுடியும்.

பொ.ஐ.முன்னணியுடன் ஒப்பிடுகையில் ஐ.தே.கட்சியின் பிரசார இயந்திரம் சற்றுப் பலவீனமாகவே காணப்படுகிறது. சட்டவிரோதமானது எனினும் பொ.ஐ.முன்னணியினர் தேர்தல்களின்போது அரச செய்தியூடகங்களை மிகவும் திறமையாகவும் கீழ்த்தரமாகவும் பயன்படுத்தினர். ஆனால் அரசமைப்பிற்கான 17ஆவது திருத்தம் காரணமாக அரச செய்தியூடகங்களை பொ.ஐ.முன்னணியினர் பயன்படுத்த இருந்த வாய்ப்புக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்றே கூறமுடியும்.

**தமிழில்: கஜனி**

இருந்தபோதிலும் பொ.ஐ.முன்னணியினர் தமக்கென ஒரு தனியார் வானொலி நிறுவனத்தை உருவாக்கியுள்ளதுடன் சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமையாளருக்கும் மங்கள முனசிங்காவுக்கும் இடையே நிலவும் நெருங்கிய நட்புறவு காரணமாக 'சுவர்ணவாஹினி' தொலைக்காட்சி சேவையையும் அதனுடன் இணைந்த வானொலி சேவையையும் ஓரளவுக்கேனும் தங்கள் அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்த முயல்வார்கள் என்றே கருதலாம். ஏரிக்கரைப் பத்திரிகைகள் (LAKE HOUSE) மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமாயின் ஏனைய செய்தி ஏடுகளின் ஒத்துழைப்பைப் பெறமுடியாத நிலைமை பொ.ஐ. முன்னணிக்கு உருவாகும். அவ்வாறான நிலைமை உருவாகும்போது பத்திரிகைகள் மீது பொ.ஐ.முன்னணியினர் மேற்கொண்ட கெடுபிடிகளுக்காக அவர்களுக்குக் கிடைத்த பரிசாக அது அமையும்.

முதலாளித்துவக் கட்சி எனக் கருதப்படும் ஐ.தே.கட்சியின் நிதி நிலைமையைவிட பொ.ஐ.முன்னணியின் நிதி நிலைமை சிறப்பாகவே உள்ளது. இருப்பினும் பொ.ஐ.முன்னணியிலுள்ள தனவந்தர்கள் தமது தரப்பினர் தோல்வியடையலாம் என்ற நிலையில் பொதுத் தேர்தலுக்காக தமது பணத்தை விரயமாக்க விரும்பமாட்டார்கள். பணத்தைத் தேர்தலுக்குச் செலவு செய்து வீணடிக்காமல் அந்தப் பணத்தைப் பாதுகாப்பது நன்மை பயக்கும் என அந்தத் தனவந்தர்கள் தீர்மானிக்கும் நிலைமை உருவாகுமேயானால் அது பொ.ஐ.முன்னணியினரின் தேர்தல் நடவடிக்கைகள் மேலும் பலவீனமடையக் காரணமாக அமையும்.

வெளிப்படையாகத் தெரியும் விதத்தில் ஐ.தே.கட்சியிலும் நிதி நெருக்கடி நிலவுகிறது. இருந்தபோதிலும் ஐ.தே.கட்சிக்கே வெற்றி நிச்சயம் என்ற நிலையில் இந்தத் தேர்தல் செலவுகளுக்கான நிதியைப் பெறுவதில் ஐ.தே.கட்சிக்கு சிரமம் இருக்காது என்றே கருதலாம்.

பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அனைத்து வாய்ப்புக்களும் ஐ.தே.கட்சிக்கே உள்ளன. இருப்பினும் இறுதி ஆய்வின்போது ஐ.தே.கட்சியின் வெற்றியின் அளவு மற்றும் பொ.ஐ.முன்னணியின் தோல்வியின் அளவு குறித்து ஆராயப்படும்.

டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி பொதுத்தேர்தலுக்கான திகதியை ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இருப்பினும் தேர்தல் முடிவுற்று பல நாள்களின் பின்னர் அதாவது ஜனவரி முதலாம் திகதியே நாடாளுமன்றம் கூடும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவடைந்த பின்னர் பின்கதவால் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள வசதியாகவே இந்த நீண்ட இடைவேளை (26நாள்கள்) வழங்கப்பட்டுள்ளது.

மிக நெருக்கமான போட்டியில் தாங்கள் தோல்வியடைந்தாலும் ஜே.வி.பி.யின் ஒத்துழைப்புடன் மீண்டும் ஆட்சி அமைக்கலாம் என்ற நப்பாசை பொ.ஐ.முன்னணித் தலைவர்களுக்கு உள்ளது. தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தற்போது ஐ.தே.கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டாலும் அவர்கள் விரும்பும் வேளையில் ஐ.தே.கட்சிக் கூட்டணியில் இருந்து வெளியேறும் வாய்ப்புக்கள் உள்ளதால் தேர்தலின் பின்னர் பின்கதவு வழியாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள அதிக வாய்ப்புக்கள் இருக்கும் என்று பொ.ஐ.முன்னணித் தலைவர்கள் கருதுகின்றனர். இருப்பினும் மிக நெருக்கமான போட்டி அமைந்தால் மாத்திரமே இதற்கு வாய்ப்பு உருவாகும்.

ஆட்சியில் இருக்கும் அரசு பொதுத தேர்தல் ஒன்றில் படுதோல்வி அடைநத சந்தர்ப்பங்களும் மிக நெருக்கமான போட்டியில் மயிரிழையில் தோல்வியுற்ற சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுள்ளன. 17 வருட ஆட்சிக்குப் பின்னர் 1994 பொதுத் தேர்தலின்போது ஐ.தே.கட்சி தோல்வியுற்றது. இருப்பினும் அந்தத் தோல்வியைப் படுதோல்வி எனக் கருத முடியாது. 1994 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பொ.ஐ.முன்னணி, வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 48.94 சதவீத வாக்குகளையும், ஐ.தே.கட்சி 44.04 சதவீத வாக்குகளையும் பெற்றன.

19 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே ஐ.தே.கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1970 ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 49 சதவீத வாக்குகளை பொ.ஐ.முன்னணி பெற்றது. அதேநேரம் ஐ.தே.கட்சி 37.09 சதவீத வாக்குகளைப் பெற்றது. 1977 பொதுத் தேர்தலில் பொ.ஐ.முன்னணி சார்பில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தத் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 50.9 சதவீத வாக்குகளை ஐ.தே.கட்சி பெற்றது. பொ.ஐ.முன்னணி பெற்ற வாக்குகள் 29.7 சதவீதம் மட்டுமேயாகும்.

1965 பொதுத் தேர்தலில் 40.4 சதவீத வாக்குகளைப் பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி, 1970 பொதுத் தேர்தலின் போது 49 சதவீத வாக்குகளைப் பெற்றது. இந்தப் பொதுத் தேர்தலில் 37.9 சதவீத வாக்குகளைப் பெற்ற ஐ.தே.கட்சி, 1977 பொதுத் தேர்தலின் போது 50.9 சதவீத வாக்குகளைப் பெற்றது. அதன் பின்னர் 1977இல் 29.7 சதவீத வாக்களைப் பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி (பொ.ஐ.முன்னணி), 1994 பொதுத் தேர்தலின் போது 48.94 சதவீத வாக்குகளைப் பெற்றது.

1970இல் பொ.ஐ.முன்னணியினர் பெற்ற வாக்குகள் 8 சதவீதத்தால் அதிகரித்தன. 1977இல் ஐ.தே.கட்சியினர் பெற்ற வாக்குகள் 13 சதவீதத்தால் அதிகரித்தன. 1994இல் பொ.ஐ.மு. பெற்ற வாக்குகள் 21.24 சதவீதத்தால் அதிகரித்தன. இந்த மூன்று பொதுத் தேர்தல்களின் போதும் அதிகரித்த சதவீத வாக்குகளின் சராசரி 14.2 ஆகும்.

இவற்றின்படி பல கட்சிகளுடன் கூட்டமைத்துப் போட்டியிடும் ஐ.தே. கட்சி வாக்களிக்கப்படும் வாக்குகளில் 50 சதவீத வாக்குகளைப் பெறலாம் எனக் கருத இடமுண்டு. அவ்வாறு அக்கட்சி 50 சதவீத வாக்குகளைப் பெறுமேயாயின் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி அக்கட்சிக்கு 125 ஆசனங்கள் கிடைக்கும். இதில் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியனவற்றிற்குக் கிடைக்கும் 17 ஆசனங்களும் அடங்கும். ஈ.பி.டி.பி தவிர்ந்த தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு 10 ஆசனங்களைப் பெறுமேயாயின் பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி, ஈ.பி.டி.பி மற்றும் சிஹல உறுமய ஆகிய கட்சிகளுக்கு மொத்தமாக 90 ஆசனங்கள் மட்டுமே கிடைக்கக்கூடும். எனவே பொ.ஐ.முன்னணிக்குக் கிடைக்கவுள்ள ஆசனங்களின் எண்ணிக்கை 75ஐ விடக் குறையக் கூடும். ☆

## பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,நவ.5

நெடுந்தீவு மேற்கு மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் இந்த அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.

(க-7)


மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை

உங்களின் உள்ளங்களில் தனியிடம் பிடித்திருக்கின்ற

தணிஸ் ரெக்ஸ்

ஸ்தாபனத்தாரின்

தீபாவளி விலைக்கழிவு

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்கேட் அன் பிளவுஸ் | 950/= | இருந்து | 600/= | இற்கு |
| சைனா ரவல் | 150/= | இருந்து | 100/= | இற்கு |
| றன்னிங் சோட்ஸ் | 175/= | இருந்து | 100/= | இற்கு |
| கோல்ட் போடர் | 850/= | இருந்து | 680/= | இற்கு |
| வித் பிளவுஸ் சாறி | 450/= | இருந்து | 350/= | இற்கு |
| பற்றிக் கவுண் | 300/= | இருந்து | 200/= | இற்கு |
| 1 சாரம் | 150/= | இருந்து | 125/= | இற்கு |
| T - சேட் | 100/= | இருந்து | 450/= | வரை |
| 1 மீற். பட்ட சில்க் பிறின்ரட் (புதிய டிசைன்) | 120/= | இருந்து | 95/= | வரை |
| 1 மீற். பட்ட சில்க் லைன்ஸ் | 110/= | இருந்து | 95/= | வரை |
| 1 மீற். தொலிவூட் | 80/= | இருந்து | 70/= | வரை |

மேற்படி பொருள்கள் தீபாவளி மலிவாக விற்பனையாகின்றன. பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு மேல்மாடியில் காட்சி அறை அமைக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தணிஸ் ரெக்ஸ்

நவாலி றோட், ஆனைக்கோட்டை.

(94221)



கோலம்ஸ் சில்க்ஸ் ஸ்தாபனத்தாரின்

மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி!

இன்று 5.11.2001 முதல் 15.11.2001 வரை.

ஓர் அரிய சந்தர்ப்பம்

இன்றே நாடுங்கள்.

கோலம்ஸ் சில்க்ஸ்

பிரதான வீதி, (94222) சங்கானை.



கல்வியாண்டு - 2001

தவணை - III முன்மாதிரிப் பரீட்சை

தரம் 9 :- 05-11-2001

தரம் :- (6, 7, 8, 10, 11) - 10.11.2001

☆ I.B.S. கல்வி நிலையம் - சண்டிக்குளி, - கோயில் வீதி.

☆ நாவலர் கல்வி நிலையம் - ஆனைப்பந்தி.

☆ றேடியன்ற் கல்வி நிலையம் - அரியாலை.

☆ கணேசன் கல்வி நிலையம் - திருநெல்வேலி.

புத்தாண்டின் புதுமையுடன் புத்தெளிரவோடு

மூச்சு மூலதனத்தில் மூவாசான்கள்.

கணிதம் :- K.P.S.விஜயன் விஞ்ஞானம் :- E.J.K.யுபன்

சமூகக்கல்வி :- S.K.A.சுதன்

(94223)



வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்

ஸ்தாபனத்தாரின்

மலிவு விற்பனை

01.11.2001 முதல் 14.11.2001 வரை.

இன்றே விரையுங்கள்:

சகலவித புடைவை வகைகளுக்கும் விசேட கழிவு உண்டு.

வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்

176, 258, கே.கே.எஸ். வீதி.

யாழ்ப்பாணம்.

(94218)

## நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி

# தீபாவளியன்று எழுச்சிப் பிரார்த்தனை

# இந்துசமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 5

நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட வேண்டி எதிர்வரும் தீபாவளித் தினத்தன்று ஆலயங்கள், இல்லங்களில் எழுச்சிப் பிரார்த்தனை நடத்தப்பட வேண்டும்.

யாழ்.இந்துசமயப் பேரவை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது குறித்து பேரவை விடுத்த செய்திக் குறிப்பு வருமாறு:-

நீண்ட நாள்களாக நமது நாட்டில் இடம்பெற்று வரும் போர் ஓய்ந்து சாந்தி, சமாதானம், சமஉரிமை கிடைக்க இறையருள் வேண்டிப் பக்தி எழுச்சிப் பிரார்த்தனை ஒன்றை நாடு முழுவதும் நடத்துமாறு சகல மக்களையும் மிகுந்த ஆர்வமையோடு கோருகின்றோம்.

போர் காரணமாக எமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வதிவிடங்களை இழந்தும், சொத்துக்களை இழந்தும், அங்கவீனர்களாகியும், உறவினர்களை இழந்தும் வாழ்கின்றனர்.

இச்சூழ்நிலையில் எமது மக்களின் நலனுக்காகவும், நாடு வளம்பெற வேண்டியும் எதிர்வரும் தீபாவளித் தினத்தில் பிரார்த்தனையில் அனைவரையும் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அன்றைய தினம் உயிர்க் கொலைகளை நிறுத்தி, மச்ச மாமிச பண்டங்களை உண்பதைத் தவிர்த்து, தெய்வீக சிந்தையுள்ள நாளாகப் பேண வேண்டும். மேலும் அவரவர் தத்தம் வீடுகளுக்கு அருகிலுள்ள அகதி முகாம்களுக்கும், ஆதரவற்றோர் வாழும் சிறு குடில்களுக்கும் சென்று தம்மாலியன்ற இனிப்புப்பண்டம், உணவு, உடை போன்றவற்றை வழங்கி அவர்களுக்கு ஆறுதல் கூறுவது சிறப்பானது.

மேலும் சகல ஆலயங்களிலும் ஸ்ரீருத்திர ஜெபம், திருத்தாண்டகப் பாராயணம் போன்றவற்றை மேற்கொள்ளுமாறும் இதற்கு சகல ஆலய பரிபாலன சபையினரும், ஆலய தர்மகர்த்தாக்களும், ஆலய பூசகர்களும் ஒத்துழைப்பு நல்குமாறும் — கேட்டுக் கொள்கின்றோம்.

மேற்குறித்த பக்திப் பிரார்த்தனை சீரிய முறையில் நடைபெற சகல தரப்பினரும் வேறுபாடுகளை மறந்து பரிபூரணமான ஒத்துழைப்பை நல்க வேண்டுமென எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-7)

## கசிப்பு, அனுமதியின்றிக் கள் விற்பனை

# இரு பெண்கள் உட்பட 9பேருக்கு 44 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி, நவ. 5

வடமராட்சிப்பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டமை, அனுமதியின்றி வீட்டில் வைத்து கள் விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக இரண்டு பெண்கள் உட்பட ஒன்பது பேருக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் 44 ஆயிரத்து 250 ரூபாவை அபராதமாக விதித்துள்ளார்.

வடமராட்சிப் பிரதேச மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி றொகான் சஞ்சே ராஜாவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் குற்றவாளிகளுக்கே அபராதம் விதிக்கப்பட்டது.

குடத்தனை கிழக்கைச் சேர்ந்த குணம் உதயகுமார் என்பவர் 20 லீற்றர் கோடா வைத்திருந்தமைக்காக 25 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்து இந்த அபராதம் செலுத்தத் தவறின் எட்டு மாத சிறைத்தண்டனையும்—

ஒன்றரை லீற்றர் கசிப்பு வைத்திருந்த துன்னாலை மேற்கைச் சேர்ந்த சுந்தன் ஜெயம், வேலன் தவராசா ஆகியோருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவும், 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த துன்னாலை மேற்கைச் சேர்ந்த, பாலச்சந்திரன் மாசிலாமணி, நாகேந்திரன் செல்வராணி சக்கோட்டையைச் சேர்ந்த நியோகுப்பிள்ளை டேவிட் ஆகியோருக்கு தலா 2 ஆயிரம் ரூபாவும்—

375 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த கரவெட்டி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மோகன் என்பவருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் 180 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த அல்வாய் கட்டைப்புளியடியைச் சேர்ந்த தர்மலிங்கம் மனோரஞ்சிதம் என்பவருக்கு ஆயிரம் ரூபாவும்—

அனுமதியின்றி இரண்டே கால் லீற்றர் கள் வைத்திருந்த புலோலி மேற்கைச் சேர்ந்த சுரேஷ் ஆனந்தகுமார் என்பவருக்கு 750 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை நீதிமன்றுக்கு சமுகமளிக்காத நடேசு நீலவேணி என்பவரைக் கைது செய்து பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(க-117)

# சங்கானையில் இன்று அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், நவ. 5

வலி. மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சங்கானை நவீன சந்தையில் புதிய கடைத் தொகுதிகள் அமைக்கப் படவுள்ளன. இதற்கான அடிக்கல் நடும் விழா இன்று திங்கட்கிழமை 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கானை மரக்கறிச் சந்தைப் பகுதியில் அமையவுள்ள இந்தக் கட்டடத் தொகுதிக்கான நிதியை வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

இதற்கென உடனடியாக 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டிருப்பதாகவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் ஏனைய நிதி வழங்கப்பட்டு விடும் எனவும் வலி. மேற்குப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமாகிய ந. திரிலோகநாதன் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு வைப்பார். (க-4)

# மலசலகூட மானிய கொடுப்பனவு

சண்டிலிப்பாய், நவ. 5

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுகாதாரத் திணைக்களத்தின் மலசல கூட மானிய உதவிக் கொடுப்பனவான 3 ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்குத் தற்போது கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பிரிவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவும், சுகாதார விதிகளுக்கு இணங்கவும் தங்கள் வீடுகளில் நிறுவப்பட்ட மலசல கூடங்களுக்கு இந்த மானிய உதவி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

உரியவர்கள் தங்களுக்கான கொடுப்பனவைச் சங்கானைபிரதான வீதியிலுள்ள பணிமனையில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளும்படி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா தெரிவித்துள்ளார். (க-135)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ. 5

இருபாலை கிழக்கு மண்டாக்குளம்பதி அருள்மிகு நாச்சியம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நடைபெறும். (க-4)

# அகவை அறுபது நிறைவு தினவிழா

யாழ்ப்பாணம், நவ. 5

முன்னாள் உடுவில் பிரதேச செயலரும், யாழ் இந்து சமயப் பேரவையின் முன்னாள் உப தலைவருமான அமரர் ஆ. மகாலிங்கத்தின் 60ஆவது அகவை நிறைவு தினவிழா ஏழாலை மேற்கு சத்திய பவனில் அமைந்துள்ள கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அகல்விளக்குகள் ஏற்றல், கலைநிகழ்ச்சிகள், சிறப்புரைகள் என்பன இடம்பெறும்.

முன்னாள் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு அமரர் மகாலிங்கத்தின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவிப்பார். யாழ். பல்கலைக்கழக மார்ஷல் ஐ. கோ. சந்திரசேகரம் வரவேற்புரையையும், பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஞாபகார்த்த உரையையும் நிகழ்த்துவர். (க-7)

# மீசாலைப் பகுதியில் வீட்டு ஓடுகள் திருட்டு

தென்மராட்சி, நவ. 5

மீசாலைப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பல வீடுகளின் கூரை ஓடுகள், கூரைத் தகடுகள் ஆகியவை இரவிரவாகத் திருடர்களால் அகற்றப்பட்டு வருவதாக அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இவ்விடயம் தொடர்பாக கொடிகாமம் சிவில் நிர்வாக அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (க-117)

# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் சரவணமுத்து

(இளைப்பாறிய ஊழியர், ACM அச்சகம், மானிப்பாய்)

டச்றோட், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட நவசிவாயம் சரவணமுத்து நேற்று (4 - 11 - 2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் பத்மாதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற புஷ்பதேவியின் அன்புத்தந்தையாரும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் சதானந்தன், விவேகானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனாரும், திருமதி நாகம்மா ஆனந்த நடராசாவின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (5-11-2001) இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், ண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

பா. பத்மாதேவி (மகள்)

வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

(94239)

## திருமதி சிவபாக்கியம் கனகசபை

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்ற இ. கனகசபையின் (மலாயன் பென்சனியர்) மனைவியுமான சிவபாக்கியம் கனகசபை (பரந்தன் கெமிக்கல்) நேற்று (04 - 11 - 2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேல் வைத்திலிங்கம் தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற முல்லைத்தீவு P W. D. ஓவசியர் இளையதம்பி தம்பதியினரின் மருமகளும், தளையசிங்கம் (ஓய்வூதியர்) Dr. சபாரத்தினம் ஆஸ்திரேலியா (மூளாய் றோட்), காலஞ்சென்றவர்களான நாகம்மா, பொன்னம்மா ஆகியோரின் சகோதரியும், இரத்தினாதேவியின் அன்புத்தாயாரும், ஓய்வுபெற்ற வேலைகள் அத்தியட்சகர் செல்லத்துரை பொன்ராசாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (05 - 11 - 2001) திங்கட்கிழமை 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'செல்வா வாசம்',
வட்டுக். கிழக்கு,
வட்டுக்கோட்டை,

தகவல்:

செ. பொன்ராசா (மருமகன்)

ரத்தினதேவி (மகள்)

(94238)

## கணபதிப்பிள்ளை சின்னப்பு

(வறுத்தலைவிளான், தெல்லிப்பழை)

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், வறுத்தலைவிளான், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்காலிகமாகத் தும்பளை (சாரதா சேவாச்சிரமம் அருகில்) பருத்தித்துறையில் வசித்தவரும், சிங்கப்பூர் துறைமுகத்தின் முன்னாள் பிரதம காசாளருமாகிய கணபதிப்பிள்ளை சின்னப்பு அவர்கள் 31-10-2001 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற புஷ்பம்மாவின் அன்புக் கணவரும், லலிதாம்பிகையின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01 - 11 - 2001 வியாழக்கிழமை தும்பளையில் நடந்தேறின.

தகவல்:

ச. ஜெயரத்தினதேவி

இலட்சுமித் தியேட்டர் ஒழுங்கை,
நெல்லியடி, கரவெட்டி.

(94236)

## பொன்னையா கதிரவேற்பிள்ளை

(முன்னாள் உரிமையாளர், அசோகா ஸ்டோர்,
யாழ்ப்பாணம்)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கதிரவேற்பிள்ளை நேற்று (04—11—2001) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் கணேஸ்வரியின் அன்புக் கணவரும் மோகனதாஸ் [பிரான்ஸ்] அவர்களின் பாசமிகு தந்தையும் சிவானந்தி [பிரான்ஸ்] அவர்களின் மாமனாரும் ஆரணியின் [பிரான்ஸ்] பேரனும் சரஸ்வதி, காலஞ்சென்ற அமிர்தயோகம் மற்றும் தியாகராசா [திருநெல்வேலி], சிவசௌந்தரி [கொழும்பு], தம்பிராசா [U. K.] ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சீனியாசகம் மற்றும் சிவமனோகரி [திருநெல்வேலி], ஆறுமுகம் [கொழும்பு], சிவபாக்கியம் [U. K.] ஆகியோரின் மைத்துனரும் திருமதி சரோஜினி ரூபன் [பிரான்ஸ்] அவர்களின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று [05—11—2001] திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:—

க.கணேஸ்வரி [மனைவி], ந.சிவபாலன் [பெறாமகன்]

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[94233]

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Polishing Cloth, வீடியோ கமரா (Panasoinc M10), Hot cuboard. இரண்டு அறைகளுடைய குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 20, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. (பார்சாலை அருகில்) (94170)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்ற, 1970இல் பிறந்த, செவ்வாய்க் (தோஷம்) குற்றமற்றவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.) விளம்பர இல. 1387, மே/பா உதயன். (94186)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், அழகிய பெண், வயது 35. பெற்றோரும், வெளிநாட்டிலிருக்கும் சகோதரர்களும் இலங்கையில் அரசாங்க வங்கி, கோப்பரேசன் உத்தியோகத்தர் அல்லது படித்த தொழில் சார்புடைய மணமகனை விரும்புகிறார்கள். உத்தியோகத்திற்கேற்ப சீதனம் வழங்கப்படும். திருமண சேவையாளர்களுககு தரகுப் பணம் வழங்கப்படும். விள. இல. 1385, மே/பாஉதயன். (94139)

## ஜோதிடம்

கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் கணித்து எழுதிக் கொடுக்கப்படும். எண், கிரக பலன்களும், திருமணப் பொருத்தமும் பார்க்கப்படும. தொடர்புகளுக்கு: நா.கந்தையா, மூத்த விநாயகர் கோயில் தெற்கு, ஆனைக்கோட்டை. (94038)

## தவறிவிட்டது

கேரதீவு வீதி, நாவற்குழியைச் சேர்ந்த இரத்தினம்பாள் ஆனந்தசுந்தரம் என்பவரது தேசிய அ.அ. (இல.765602971V), விசேட அ.அ. (இல.091001374) என்பன நாவற்குழியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சௌபாக்கியா தொலைத் தொடர்பகம், சந்தை முன்பாக, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி T.P.No. 2963 என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (94216)

தங்கராசா கிசோக்குமார் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.0903004497) ஆவரங்கால் சந்திக்கும் இருபாலைக்குமிடையில் கடந்த 25.10.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பாள் தொலைத் தொடர்பகம், புத்தூர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (94217)

## இலக்கியக் கட்டுரைகள்

O/L மாணவர்களே! உங்கள் பாடநூல்களில் உள்ள சிறுகதைகள் 'பொருளோ பொருள்', நாடகம் 'வீடற்றவன்' நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கமும் விமர்சனமும் எழுதியிருக்கிறார் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை. ரூபா 125/=. (94219)

## யோகாசனக் கண்காட்சி

நெல்லியடி,நவ.5

வடமராட்சி மாணவர்களின் உடல், உள நல மேம்பாடு கருதி, தும்பளை யோகசாந்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யோகாசன கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க-109)

## குருநகர் மத்தியூஸ் வீதியின் அவலம்

குருநகர், மத்தியூஸ் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் அதிகளவாகப் பயணிக்கும் இந்த வீதியைத் திருத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் சில பொது அமைப்புக்களிடமும் பலதடவைகள் கோரிக்கை விடுததிருந்தும் இதுவரை பலன் கிட்டவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பித்திருப்பதால் வீதியிலுள்ள குழிகளில் மழைநீர் தேங்கி நிற்கிறது. இதனால் மாணவர்கள் மற்றும் வழிப்போக்கர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (க-4)

---

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

## ஏலவிற்பனை

ஏலவிற்பனைத் திகதி 2001.11.09 காலை 10.00 மணி.

*(அலுவலக நேரத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்).*

01. பாவிக்கப்பட்ட ரயர் (பிக்கப் வாகனத்திலிருந்து கழற்றப்பட்டது) 05எண
02. கேற் 6'x2 1/2' - 05 எண்ணிக்கை.
03. உடைந்த இரும்புப்பெட்டி (அயன்சேவ்) - 01 எண்.
04. பழுதடைந்த Avery தராசு - 01
05. குறித்த அளவு இரும்புக் கம்பிகள் (பாவிக்கப்பட்டது).
06. சுருக்குக் கதவு 7 1/2' - 01 எண். (பாவிக்கப்பட்டது).
07. வெற்றுத் தார் பரல்கள் - 100.
08. ஒரு வேப்பமரமும் அதன் கொப்புகளும். (மரத்தின் பகுதிகள் யாவும் ஒரு கிழமைக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.)

### மின்பொருள்கள்

01. M.V.choke 125 watts - 07 No.
02. M.V. Lamp and shade large - 07No.
03. Shade with holder class cover complete - 02 No.
04. M.V. Shade cover glass only - 03 No.
05. Focus lamp complete - 01 No.
06. Focus lamp without glass cover - 04 No.
07. Air cleaner small - 05 No.
08. Air cleaner Large - 04 No.
09. M.V.lamp shade 125 watts with hol. - 04 No.
10. M.V.lamp 125 watts shade only - 09 NO.
11. M.V. lamp shade 25 watts - 15 No.
12. Ord.Lamp shade 40 watts - 86 No.
13. Fuse cut-out transformer 500Amps - 02 No.
14. Fuse cut-out transformer 200 Amps - 01 No.
15. Ceiling rose - 15 No.
16. Round blocks - 54 No.
17. Steel lamp sitch 16 Amps - 02 No.
18. Choke box - 01 No.
19. D large only without insulator - 16 No.
20. Tube light complete without bulb - 03
21. Shakle strap small complete - 10 No.
22. Stay Insulator - 01 No.
23. 7"x5/8" Nut without bolt - 110 No.
24. 7"x1/2" Nut without bolt - 21 No.
25. Small insulator only - 10No.
26. Teak plug - 04 No.
27. Street lamp fuse box - 56 No.
28. Tube light holder (single) - 127 No.

*சித்திபெற்ற ஏலதாரர் உடன் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதுடன். பொருள்கள் அனைத்தையும் உடன் அப்புறப்படுத்தல் வேண்டும்.*

*வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். 2001.11.04*

க.கமலசேகரன் (ஜே.பி.யு.எம்.)
*தலைவர்.*

(C/18979)

---

# விற்பனையாகின்றன

- பல்வேறு வகையான தீபாவளி வாழ்த்து மடல்கள்
- 2002ஆம் ஆண்டிற்கான 'பொக்கற் கலண்டர்கள்'
- கணிதம் மாதிரி வினா விடை - O/L - 125/=
  கு. வி. அச்சகம்
- சமூகக்கல்வியும் வரலாறும் மாதிரி வினா விடை - O/L - 125/=
  கு. வி. அச்சகம்
- சமூகக்கல்வியும் வரலாறும் மாதிரி வினா விடை - O/L - 130/=
  சிவஞானசுந்தரம்
- தமிழ் இலக்கியம் விருப்பத்துக்குரிய வினா விடை - O/L - 150/=
  சிவஞானசுந்தரம்
- தமிழ் இலக்கியம் விருப்பத்துக்குரிய கடந்தகால வினா விடை - O/L - 45/=
- சைவநெறி - தரம் - 8
- விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் - O/L - பகுதி - 2
  செல்வவேல்
- சமூகக்கல்வியும் வரலாறும் - தரம் - 7
  கு. வி. அச்சகம்

(C/18978)

**ஸ்ரீ காந் புத்தகசாலை**
165. மின்சார நிலைய வீதி.
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

**மக்மிலன் புத்தகசாலை**
03. பஸ் நிலையம்.
யாழ்ப்பாணம்.

---

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது இன்பருட்டி சனசமூக நிலையக் கட்டடம் புனரமைப்புச் செய்வதற்கு ஐந்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்ததுடன் முதற்கட்டமாக இரண்டரை லட்சம் ரூபாவை உடன் தந்துதவிய



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் நாயகமும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார. இந்து சமய கலாசார வடக்கு புனர்வாழ்வு. புனரமைப்பு
மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான
உயர்திரு.
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்





வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும் மக்களின் தோழனுமான
உயர்திரு. **ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**
அவர்களையும்

*மனம் நிறைந்த நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*பருத்தித்துறை.* (94224) இன்பருட்டி சனசமூக நிலையம்

---

# ஆசிரியர் குறைநிவர்த்தி சேவை பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.5

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடமராட்சிக் கல்வி வலயத்தில் இன்றும், நாளையும் ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்களுக்கான குறை நிவர்த்தி சேவை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறை நிவர்த்தி சேவை எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் ஒரு மணி முதல் நடைபெறும் என்றும் -

ஏற்கனவே திட்டமிட்டபடி தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியர்களுக்கான குறைநிவர்த்தி சேவை எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் என்றும் - யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி அறிவித்துள்ளார். (ம)

---

# இடமாற்றம்

*114, பிரதான வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரியில் இயங்கி வந்த **அனற் மருந்தகம்** இன்று (5-11-2001) திங்கட்கிழமை முதல் *224, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்* எனும் முகவரியில் இயங்கும். இந்த நிகழ்வு குருநகர் யாகப்பர் ஆலய பங்குத் தந்தையால் ஆரம்பித்துவைக்கப்படும்.

உரிமையாளர்
**செபஸ்ரியான் பிரான்சிஸ்.**

(94235)

---

# அன்புடன் நன்றி கூறுகின்றோம்

## கெருடாவில் தொட்டில் கந்தன் தேவஸ்தானம்

மேற்படி ஆலயத்திருத்த வேலைகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா இரண்டு லட்சத்தில் முற்பணமாக ரூபா ஒரு லட்சத்தை காசோலையாக தந்துதவியமைக்காக, வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர் **K.N.டக்ளஸ் தேவானந்தா** அவர்களுக்கும் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் **K.V.குகேந்திரன்** (ஜெகன்) அவர்களுக்கும் வடமராட்சி E.P.D.P. அமைப்பாளர் **ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்** அவர்களுக்கும் வல்வெட்டித்துறை E.P.D.P. இணைப்பாளர் **ச.யோகராசா** அவர்களுக்கும் நாம் உளங்கனிந்து நன்றி கூறுகின்றோம்.

கெருடாவில் தொட்டில் கந்தன் தேவஸ்தானம்,
திருப்பணிச்சபைத் தலைவரும் ஆதீன கர்த்தாவும்
மு.கு.பாலசுப்பிரமணியகுருக்கள்.

(94230)

---

நெஞ்சை விட்டகலாத

# 31 ஆம் நாள் நினைவு நாள்

பிறப்பு: 04 - 08 - 1944



இறப்பு: 06 - 10 - 2001

## அமரர் சரவணை குலசிங்கம்

(இ.மி.ச.)
(அலாவுதீன் நாடகபுகழ் நடிகர்)

இன்று (05.11.2001) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோண்டாவில் தில்லையம்பதி,*
*கோண்டாவில்.* (94232)

- குடும்பத்தினர்.

---

# ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 01 - 04 - 1942



உதிர்வு: 29 - 10 - 1999

## அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்

ஈராண்டுப் பிரிவினிலும் இமைதூங்க மறுக்கிறதே
இணையிழந்த இடியதனை உணர்கையிலே - நீவீர்
ஈங்கிலாத் துயரதனைப் போக்கிடவே
இறைஞ்சுகின்றேன் எந்நாளும் - உம்
பிறப்பிலாப் பெருவாழ்விற்காய்.

*சங்குவேலி தெற்கு,*
*மானிப்பாய்.* (94237)

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி.

# மக்கள் குறை நிவிர்த்தி சேவை

## மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களின் நடமாடும் சேவை

★ வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த வைகாசி மாதம் நடைபெற்ற மக்கள் குறைநிவிர்த்தி சேவையின் போது அறிவிக்கப்பட்டதன் பிரகாரம்.

எதிர்வரும் **10ஆம் 11ஆம் திகதிகளில் (10.11.2001 சனிக்கிழமை, 11.11.2001 ஞாயிற்றுக்கிழமை)**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை மக்கள் குறைநிவிர்த்தி சேவை நடைபெறும்.

★ இச்சேவையின் ஊடாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பும் அனைவரும் இச்சேவையில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

★ மத்திய அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள். திணைக்களத் தலைவர்கள், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் இச்சேவையில் பங்கேற்பதால். இவர்களுடனான உத்தியோகபூ ர்வ கடமைகளை துரிதப்படுத்தவும். மக்களுக்கு விரைவாக கருமமாற்றவும். வீணான தாமதங்கள் மக்களுக்கு ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடன். இச்சேவையை மக்களுக்கு வழங்குவதில் எமது அமைச்சு மகிழ்ச்சி அடைகிறது.

### மாணவர் காப்புறுதித் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களை உட்படுத்திய 445 பாடசாலைகளைச் சேர்ந்த 158,458 மாணவர்களுக்கான காப்புறுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவென இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் வடக்கின் மீள் குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபை ஒரு மாணவனுக்கு ரூபா 25,000/= பெறுமதியான விபத்துக் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திட்டுள்ளது.

இத் திட்டத்திற்கென எந்தவொரு மாணவனும், எதுவிதபணக் கொடுப்பனவும் செலுத்தத்தேவையில்லை.

இத்திட்டத்தின் விசேட அம்சங்களும், இதனால் மாணவர்களுக் குக்கிடைக்கும் பயன்பாடுகள் தொடர்பான விரிவான அறிவித்தல் விரைவில் வெளிவரும்,

இந் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட ஆசிரியர் கள், மாணவ வகுப்புத் தலைவர்கள் இத்திட்டத்தை உடன் அமுல் படுத்தும் முகமாக இதற்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ள படிவங்களை கோட்ட மட்டத்தில் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து நடமாடும் சேவை நாள்களில் தத்தம் பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுக் காப்புறுதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

### பனை அபிவிருத்தி சபை

#### தொழிலாளர் காப்புறுதித் திட்டம்

பனைசார் சீவல் தொழிலாளர்களுக்கான ரூபா 100,000/= பெறுமதியான விபத்துக் காப்புறுதித் திட்டத்திற்கு இதுவரை தங்கள் பெயர்களைப் பதிவு செய்த 2,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கான கூட்டுக் காப்புறுதிப்பத்தி ரம் வழங்கப்படும்.

இதற்கென விண்ணப்பித்த தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த சங்கங்கள் அவற்றின் பிரதிநிதிகள் இந்த நடமாடும் சேவை நடைபெறும் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில். பனை அபிவிருத்திச் சபை அலுவலகப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கான தனித்தனிக் காப்புறுதிப் பத்திரம் தொடர்ந்து மத்திய கல்லூரியில் இயங்கவுள்ள இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் விசேட கருமபீடம் ஊடாக தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது' வரை விண்ணப்பிக்கத் தவறிய தொழிலாளர்கள் அவர்கள் சார்ந்த சங்கங்கள் ஊடாக இச்சேவையின் போது விண்ணப்பிக்கலாம்.

### மாணவர் புலமைப் பரிசில் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் யுத்த அனர்த்தம் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கான புலமைப்பரிசில் உதவித்திட்டம் நடைமுறை படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கெனத் தெரிவு செய்யப்பட்ட மாணவ-மாணவியர் தமக்கான புலமைப்பரிசில்களை இந்த நடமாடும் சேவையின்போது பெற்றுக்கொள்ளலாம்.

### ஏனைய துறை சார் சேவைகள்

- அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களை பெறவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- கடவுச் சீட்டுகளுக்கான விண்ணப்பங்களை பெறவும், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை கையளிப்பதற்குமான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- மோட்டார் வாகன பதிவுத் திணைக்களத்திலிருந்து மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதற்குப் பரிசோதகர் வெகுவிரைவில் வரவிருப்பதால், தாமதமின்றி பரிசோதனைகள் செய்து சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு உரிய படிவங்களைக் கையளிக்கலாம்.
- கல்வி, உயர்கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகள் பங்குபற்ற இருப்பதால், மத்திய கல்வி அமைச்சின் ஊடான தமது பிரச்சினைகளை முன்வைக்கும்படி கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
- குவைத் நாட்டிலிருந்து இலங்கை திரும்பியவர்களுக்கான நஷ்டஈடுக் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள்.
- வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளர் உட்பட மற்றும் அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் வர இருப்பதால், இவற்றுடன் சம்பந்தப்பட்ட பொதுமக்கள், அரச அலுவலர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கலாம்.
- யுத்த அனர்த்தங்களால், குடும்பத் தலைவர்களை இழந்தவர்கள், ஊனமுற்றவர்கள், உழைக்கும் திறனை இழந்தவர்களின் சுயதொழில் வாய்ப்புக்கான முன் உதவித் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்படும்.
- மீனவர்கள் தொழில் புரியும் போது அவர்கள் எதிர்கொள்ளும் உயிராபத்துக் காரணமாக மீனவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்றை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் அங்கம் வகிக்கும் சங்கங்கள் தத்தம் பிரதிநிதிகள் ஊடாக மீனவர்கள் தொடர்பான விவரங்களை வடக்கின் மீள் குடியேற்ற மற்றும் புனரமைப்பு அதிகார சபையின் அலுவலகப் பகுதியில் கையளிக்கவும்.
- விவசாயிகளுக்கான விசேட ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதால், விவசாயத் தொழில் ஈடுபடுவோர் அதனை உறுதிப் படுத்தும் ஆவணங்களுடன் நேரில் சமுகம் தரும் வண்ணம் கேட்கொள்ளப்படுகின்றார்கள்.

### தென்மராட்சி மக்களுக்கு.......

பாரிய அழிவுகளைச்சந்தித்து முற்றாக சிதைவடைந்து போயுள்ள தென்மராட்சி பகுதியை மீள கட்டியெழுப்பும் பாரிய பணியினை ஆரம்பிக்க உள்ளதால் இப்பகுதி வாழ் மக்கள் இந் நடமாடும் சேவையின்போது வடக்கின் மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையினூடாக வழங்கப்படவுள்ள விசேட இழப்பு மதிப்பீட்டு படிவத்தைப்பெற்று உரிய ஆவணங்களுடன் சபைக்கு விண்ணப்பிக்கும் வண்ணம்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உதவித் திட்டங்களை முன்னெடுக்க பூரண மதிப்பீட்டின் தேவை அவசியமாதலால் பாதிப்பிற்குள்ளாகிய மக்கள் தமது பதிவுகளை விரைவாக பூர்த்தி செய்யும்வண்ணம்கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*குறிப்பு:-*

**கல்லூரி முன்றலில் சேவை செய்யும் தொண்டர்களின் வழிகாட்டலைப் பெற்று சம்பந்தப்பட்ட அலுவலகப் பகுதிகளுக்குச் சென்று தத்தமக்குரிய சேவைகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

செயலாளர்,
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கின் தமிழ்விவகாரங்கள் அமைச்சு.

(சீ18982)

## 1990 முதல் 1999வரை யுத்தம், பொருளாதாரத் தடைகளால்

# கிளிநொச்சி, முல்லை மாவட்டங்களில் 13 ஆயிரத்து 379 பொதுமக்கள் பலி!

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் யுத்தம் மற்றும் அரசின் பொருளாதாரத் தடைகள் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரை 13ஆயிரத்து 379 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வாரத்தில் வன்னியில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு 'தமிழ் நெற்' இணையத் தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் பொதுமக்களின் அதிக உயிரிழப்புக்கள், சொத்து அழிவுகள், பெரும் இடப்பெயர்வு போன்றவை 1994ஆம் ஆண்டு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த பின்னரே இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

1994 முதல் 1999 வரையான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் பொருளாதாரத் தடையின் நேரடித் தாக்கத்தால் - முக்கியமான மருந்துப் பொருள்களுக்கான தடையால் - 4ஆயிரத்து 879 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளின் தற்போது மொத்த சனத்தொகை 3 லட்சத்து 32ஆயிரம் பேர். இந்தச் சனத்தொகையில் நான்கு வகுத்தினரான 13ஆயிரத்து 379பேர் இந்த மாவட்டங்களிலும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் போர் நடவடிக்கைகள் மற்றும் பொருளாதாரத் தடையால் அநியாயமாகப் பலியாகியுள்ளனர் என்றும் அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

அத்தோடு - ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகள் இராணுவத்துடன் செயற்படும் துணைப்படைகளின் பெரும் படுகொலைகள் மற்றும் இராணுவ, பொலீஸ் தடுப்புக்காவல் மரணங்கள் ஆகியவற்றினால் வன்னி மாவட்டங்களானமன்னார், வவுனியாவிலும் மேலும் ஆயிரக் கணக்கானோர் அழிந்துள்ளனர்.

மன்னார், வவுனியா மாவட்டங்களில் மக்கள் வாழும் பிரதான பிரதேசங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

தனதுடைய ஆட்சியின் காலத்திலும் பார்க்க ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயே அதிக தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி கூறியதை 'புலிகளின் குரல்' வானொலி மறுத்ததன் பின்னணியில் இந்தப் பத்திரிகை அறிக்கை வெளியாகியிருக்கின்றது.

கடந்த செவ்வாயன்று ஸி.என்.என. தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த ஜனாதிபதி, வன்னிக்கு பொருளாதாரத் தடை ஏதும் விதிக்கப்படவில்லை என்று கூறியிருந்தார்.

### சிங்கள குடும்பங்கள் இடம்பெயர்வு

அம்பாறை மத்திய முகாம் பகுதியில் வசித்து வந்த 500 இற்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி வருகின்றன.

இவர்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் அண்மையில் மூடப்பட்டதை அடுத்தே அவர்கள் இடம்பெயர்ந்து வருகின்றனர். இடம்பெயர்ந்த குடும்பங்கள் அனைத்தும் அம்பாறை நகரில் உள்ள பாடசாலை ஒன்றில் தஞ்சம் அடைந்துள்ளன. (ம-6)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணபதிப்பிள்ளை சிவகரன் (வயது23) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

இவர் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவர் எனவும் -

இவரது வீட்டிலிருந்து கிரனேட் ஒன்றினையும் பிஸ்ரல் ஒன்றையும் ரவைக்கூடுகள் சிலவற்றையும் தாம் கைப்பற்றி உள்ளதாகவும் - பொலீஸார் தெரிவித்தனர். (ம)

## பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று குறிப்பிட்டது.

இந்தக் கிரனேட் வீச்சுச் சம்பவத்தை இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சம்மேளனம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

பொ.ஐ.முன்னணியின் பிரதி அமைச்சரான மேர்வின் சில்வாவும் சில தினங்களுக்கு முன் இந்தப் பத்திரிகை அலுவலகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து ஆசிரியபீட அலுவலர்களை மிரட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## காலித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்துக் கடல் மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டிருந்த அந்தக் கப்பலைக் கடற்படை கண்டு பிடித்ததாகவும் -

அதனைக் கைப்பற்றி மீண்டும் துறைமுகத்துக்குக் கொண்டுவர கடற்படையினர் முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனின் மேற்படி சொத்து முடக்க அறிவிப்பின் பிரகாரம் அனைத்து நிதி நிறுவனங்களும், அமைப்புக்களும் தமது ஆதனங்களைச் சரி பார்த்து அவற்றில் தீவிரவாதிகளின் சொத்துக்கள் எவையாவது காணப்பட்டால் அவற்றை முடக்கி வைக்க வேண்டும் என ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர் என்று பிரிட்டிஷ் நிதி அமைச்சர் சொன்னார். (ம-6)

# இளைஞர்கள் கோஷ்டி நல்லூரில் அட்டகாசம்

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த யுவதி ஒருவரை வழிமறித்து இளைஞர் குழு ஒன்று தரக்குறைவாக நடந்து அட்டகாசம் புரிந்துள்ளது.

இதனால் பீதியடைந்த அந்த யுவதி ஏக்கமடைந்து மயங்கி வீழ்ந்ததாகவும்-

பின்னர் அவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சைக்கிளில் தனியாகச் சென்றுகொண்டிருந்த அந்த யுவதியை வழிமறித்த மேற்படி இளைஞர் கோஷ்டி அவரது கழுத்தைத் திருக முற்பட்டுளளது. அத்துடன் மோசமான வார்த்தைகளால் அவரைத்திட்டி, அவருடன் தகாத முறையில் நடக்கவும் முற்பட்டுள்ளது.

அவர்களிடமிருந்து ஒருவாறு தப்பியோடிய யுவதி வீடு சென்றதும் ஏககத்துக்குள்ளாகி மயங்கி வீழ்ந்தார். உடனடியாகப் பெற்றோர் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் பின்னர் சாதாரண வார்ட்டுக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை -

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் தினமும் குறிப்பிட்ட இளைஞர் கோஷடி பெண்களுடன் தகாத முறையில் நடந்து அட்டகாசம் புரிந்து வருவதாகவும் -

சைக்கிளில் செல்லும் பெண்களின் தொப்பிகளைப் பலவந்தமாகப் பறித்து வருவதாகவும் -

தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் என தம்மை இனங்காட்டிக் கொண்டே அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டுவருவதாகவும் -

அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவிததனர்.

இத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் வாளாவிருப்பதாலேயே இவர்களின் அட்டகாசங்கள் கட்டுமீறிச் செல்வதாகப் பொதுமக்கள் கடும்விசனம் தெரிவித்தனர். (ம-6)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கப்பெற்றவர்களில் பொ.ஐ. முன்னணி வேட்பாளரான குமரையா தாமோதரம்பிள்ளை தனது விலகல் கடிதத்தை மட்டக்களப்பு தெரிவத்தாட்சி அதிகாரிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ளார். முன்னணியின் முதன்மை வேட்பாளரான முன்னாள் பிரதி அமைச்சர் எஸ். கணேசமூர்த்தி தனது பிரசாரப் பணிகளை நிறுத்தி விட்டு கொழும்புக்குத் திரும்பி விட்டார்.

தொடர்ந்து மேலும் பல வேட்பாளர்கள் தமது விலகல் கடிதத்தைச் சமர்ப்பிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## ஆங்கிலத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்ட பரீட்சார்த்தியாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற அவர் முயற்சித்துள்ளார் எனவும் -

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

1999 இல் அறுபது வயதை அடைந்த அவர், தொடர்ந்தும் சேவை நீடிப்புப் பெற்று, பதவியில் நீடித்து வருவதாகவும் - அந்தப் பத்திரிகை குறிப்பிட்டது. (உ)

## அர்ஜுனவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்தடுத்த வாரங்களில் அவர் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் சென்று ஐ.தே.கட்சிப் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அர்ஜுன ரணதுங்க சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள போதும் அரவிந்த டி சில்வா தான் ஓய்வு பெறுவதாக இன்னமும் அறிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் வெளியிடுவோம்.

பிரபாகரனின் இராணுவ நடவடிக்கைகள் தோல்வி கண்டுவிட்டன. அதனால் அரசியல்வாதிகள் மூலம் ஈழம் என்ற தமது இலட்சியத்தை அடைய அவர் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

பிரபாகரனின் பயங்கரவாத அச்சுறுத்தலை ஒழித்துக்கட்ட எமது அரசாங்கம் உரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தற்போது நடைபெற்று வரும் யுத்தத்துக்கு முன்னாள் ஜனாதிபதிகளான காலஞ்சென்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் ஆர்.பிரேமதாஸவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும்.

அரசியல்வாதிகள் தமக்கு 65 வயதானதும் அரசியல் வாழ்வில் இருந்து ஒதுங்கிக் கொள்வதுடன் இளம் சந்ததியினர் அரசியலில் பிரவேசிக்க இடமளிக்க வேண்டும்.

அரசியலில் அதிக விருப்பம் கொண்டு அதை நான் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை. எனது 65 ஆவது வயதில் அரசியலிலிருந்து ஓய்வுபெற்று விடுவேன். நான் இப்போது இப்படிக் கூறுவதைத் தேர்தல் கால அச்சம் என்று யாரும் நினைத்து விடக் கூடாது. எனது கட்சி உறுப்பினர்களுக்கு ஏலவே இது குறித்து நான் கூறியிருக்கின்றேன்.

இந்த நாட்டை வரும்காலத்தில் இளைஞர் அணியே வழிநடத்த வேண்டும். அவர்களின் திறமை பல வழிகளிலும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அந்த வகையில், இம்முறை தேர்தலில்கூட எமது கட்சியின் தேசியப் பட்டியலில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார். (உ-6)

SALE!
தீபாவளியை முன்னிட்டு
சங்கமம் ரெக்ஸ்
SALE! SALE!
வழங்கும் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை!
இந்தத் தள்ளுபடி 14.11.2001 வரையுமே!
இப்போது எழில்மிகு தீபாவளி புடவைகள்
உங்களது அபிமான "சங்கமம்" ரெக்ஸில்
கண்கவரும் அணிவகுப்பில் பவனி வருகின்றன.
கலர்களோ ஏராளம்...!
விலைகளோ நீங்கள் எதிர்பார்த்ததுடன்
கொடுத்திடும் அளவே! பல்வேறு புதிய
டிசைன்களிலும் நவீன ரகங்களிலும்
உங்கள் வரவுக்குக் காத்திருக்கின்றன!
சங்கமம் ரெக்ஸ்
54 A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
(C/18977)

இதோ! முந்துங்கள்!
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!
"ஒருவர் மீதான
உங்கள் ஒப்பற்ற அன்பை
அதே தரத்துடன் வெளிப்படுத்துவதற்கு"
'மகாநதி' யின் ஆடைகள்.
உங்களின் பாசப் பிணைப்பில் அவர்கள் திணறட்டுமே!
ஆம்!
மகாநதி புடைவையகம்
சாறி, பிளவுஸ் பீஸ் வகைகளுக்கு
பிரத்தியேகக் காட்சி அறை,
16, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. - 2552
(18653)

கூட்டுறவு பரிசோதகர்
பரீட்சைக்கான
வழிகாட்டல் வகுப்பு
த.தவச்சகர் (B.Sc.)
ஆரம்பம்:- 06.11.2001
செவ்வாய், வியாழன் } 3-6 (S.L.T.)
கூட்டுறவுப் புத்தகம் இன்றிலிருந்து
மீண்டும் சகல இடங்களிலும் கிடைக்கும்.
D.M.I
(அறிவகம் சந்தி)

BEACON
2002
நாடகமும் அரங்கியலும்
பகுதி III
ஆரம்பம்:- 05. 11. 2001
திங்கள், புதன் 3.30 p.m.
சனி, ஞாயிறு 11.00 a.m.
ஆசிரியர்:- T.J.சுதன்
(94225)

கணனிகள் விற்பனைக்கு
Pentium III - 1000mhz / 933mhz / 866mhz / 733mhz
Pentium 4 - 1.5 Ghz
கணனிகள், Printers, Scanners, UPS விற்பனைக்குண்டு.
யாழ்நகரிலேயே, தரமான கணனிகளை, கணனி உதிரிப்பாகங்களை நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.
மேலதிக விபரங்களுக்கு ⟹
(C/18915)
Institute of Informatics Studies
100, Clock Tower Road, Jaffna.
T.P. No: 21-2831

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.